# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 5 இதழ் : 2 ஜனவரி 2026



உங்கள் தலைமை எங்களுக்கு வழிகாட்டியது.
நீங்கள் வழங்கிய வழிகாட்டுதலுக்கு நாங்கள் என்றும்
நன்றியுள்ளவர்களாக இருக்கின்றோம்.



தெய்வத்திரு

# அரு. இராமசாமி செட்டியார்

**அவர்களை அவரது 101வது பிறந்தநாளில் நினைவுகூர்கிறோம்**

**29/12/1924 - 29/12/2025**

## ஸ்ரீ விசாலம் சிட்:பண்ட் லிமிடெட்


| | | |
|---|---|---|
| முன்னாள் நிர்வாக இயக்குநர் | : | ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட் |
| முன்னாள் இயக்குநர் | : | தி நெல்லை ஃபைனான்ஸ் (பி) லிமிடெட் |
| முன்னாள் இயக்குநர் | : | அருணா கெமிக்கல் & பார்ம்ஸ் (பி) லிமிடெட் |
| முன்னாள் அறங்காவலர் | : | ஸ்ரீ விசாலம் அறக்கட்டளை |

**என்றும் தங்கள் நினைவை போற்றும்...**

| | |
|---|---|
| அரு. விஸ்வநாதன் | தலைவர் |
| அரு. மீனாட்சி | இயக்குநர் |
| அரு. உமாபதி | நிர்வாக இயக்குநர் |

குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட் அலுவலர்கள்

**உங்கள் ஆதரவின் மூலம் நாங்கள் இவ்வுலகை மேன்மைப்படுத்துகின்றோம்.**



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

ஜனவரி 2026

மலர் : 5  இதழ் : 2

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

**இதழாசிரியர்**

உமையாள்

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.



**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534



கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...

வாசகர்களுக்கு அன்பு வணக்கம்...!

ஒவ்வொரு விசேஷத்திலும் நம் வீட்டு வளவுக்குள் நமது உறவுகளைச் சந்தித்து மகிழ்வு கொள்வதைப் போல், ஒவ்வொரு மாதமும் இம்மலர் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி!

இன்றளவும் நம் நகரத்தார் பெருமக்களின் இஷ்ட தெய்வமாக விளங்குபவன் முருகனே. "செட்டிக் கப்பலுக்குச் செந்தூரான் துணை" என்றும், வேலை வணங்குவதே வேலை என்றும் வாழ்ந்தவர்கள் நகரத்தார்கள்.

முருகப்பெருமான் என்றதும் ஆறுபடை வீடு நினைவுக்கு வரும். ஆறுபடை வீடு பற்றி யோசிக்கும் போதே, அதில் முக்கியமான, எப்போதும் பக்தர்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகிற பழநி ஞாபகத்துக்கு வரும். பழநியம்பதியை நினைக்கும் போதே, தைப்பூசத் திருநாள் சட்டென்று நம் நினைவில் வந்து உட்கார்ந்து கொள்ளும். அப்படி தைப்பூசவிழா கண்ணில் நிழலாடுகிற அதேவேளையில், பாதயாத்திரையும் மனதில் வந்துபோகும். அந்தப் பாதயாத்திரையை உருவாக்கியவர்கள் நம் நகரத்தார்கள்!

இன்று தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் இருந்தும் பல லட்சக்கணக்கான பக்தர்கள், பாத யாத்திரையாக பழநிக்கு வருகின்றனர். இதற்கெல்லாம் பிள்ளையார் சுழி போட்டது செட்டிநாடு; துவக்கி வைத்த பெருமைக்கு உரியவர்கள் நம் செட்டிமக்கள்தான்!

காவடி சுமந்து கந்தன் அருள் வேண்டி பழநியம்பதி நோக்கி பக்தியுடன் நகரத்தார் பயணிக்கும் நிகழ்வு, இந்த ஆண்டு வழக்கம் போல் சிறப்பாக நடைபெறுகிறது. நம் நகரத்தார்கள் அனைவருடனும் நாமும் இணைந்து அனைத்து மக்களின் நலனுக்குக்காக பழநி பாலதண்டாயுதபாணியை பிரார்த்தனை செய்வோம்.

தைப்பூசத்தையொட்டி இந்த இதழ் "தைப்பூச சிறப்பிதழ்" ஆக தங்கள் அனைவரது வாசிப்பை கவரும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல ஆக்கங்களுடன் வெளியிடுகின்றோம்.

முருகனை கொண்டாடும் விதமாக இந்த இதழில் முருகனின் முதல் கற்றளிக் கோவில் குறித்து காணவிருக்கிறோம். இந்தக் கோவிலானது அன்று நம் நகரத்தார் ஊர்களில் ஒன்றாக இருந்த கண்ணனூரில் அமைந்துள்ளது என்பது அனைவரும் அறியாத செய்தி.

முருகனுக்கான முதல் கற்றளிக் கோயிலான இத்திருக்கோயில் அதிகமாக மக்களிடம் சென்று சேராத நிலையில், இத்திருக்கோயில் பெருமைகளை அனைவரும் அறிந்து முருகன் அருள் பெற முருகபக்தர்கள் அனைவரும் உதவுவதோடு திருக்கோயில் திருப்பணிகளிலும் வழிபாடுகளிலும் பங்கு பெறுதல் வேண்டும்.

மேலும் இந்த இதழில் நகரத்தார் பழனி பாதயாத்திரை வரலாறு குறித்த கட்டுரையும் இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணம் இடம் பெறுகிறது.

இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

மேலும் நமது மின்னிதழின் வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சலிலோ அல்லது வாட்ஸாப் எண்ணிலோ தொடர்பு கொள்ளவும்.

வாசகர்கள் எந்நேரத்திலும் எப்போதும் மின்னிதழை வாசிக்க ஏதுவாக மின்னிதழின் MOBILE APP வெளியிடப்பட்டு தற்போது உலகளாவிய பயன்பாட்டில் உள்ளது.

இதழ் குறித்த தங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் தங்களது படைப்புகளை naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்


நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்

t.me/naamnagarathar
Join Telegram

www.sreevisalam.com

# ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

**06-01-1947 முதல் மக்கள் சேவையில்,**
**தென்னிந்தியாவின் நம்பகமான சீட்டு நிறுவனம்.**

38 கிளைகள்

79 வது

10 லட்சத்திற்கும் மேலான வாடிக்கையாளர்கள்

தலைமுறைகளை கடந்து வாழ்வின் சவால்களை எதிர்கொள்ள என்றும் உங்களுடன்.

## நம்பிக்கையான ஆண்டு

## எங்களின் வெற்றிப்பயணத்தில் மேலும் ஓர் நம்பிக்கையான ஆண்டு

**தலைமுறைகள் தாண்டும் வெற்றிப் பாதையில்**
**உங்கள் உற்ற நண்பனாய், ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்.**

ஒரு சகாப்தத்தின் நம்பிக்கையோடு, மக்கள் மனதில் மகிழ்ச்சியைப் பரவ செய்யும் ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட். நிறுவனத்தின் 79வது ஆண்டு விழா. வைர விழா கண்ட எங்கள் நிறுவனத்தின் மீது நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையும், நிறைவான திட்டங்களினால் உங்கள் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுமே எங்கள் வெற்றி என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். தோளோடு தோள் நிற்கும் உற்ற நண்பனாய், காலத்திற்கேற்ற மாற்றங்களோடும் தொழில்நுட்ப முன்னேற்றங்களோடும், எதிர்கால இலக்குகளான, நம்முடைய ஒன்றிணைந்த வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்தை நோக்கி எங்கள் நிறுவனம் பெருமையுடன் நடைபோடுகிறது. எங்களுடைய அனைத்து தரப்பு வாடிக்கையாளர்களுக்கும் தரமான, நிலையான, தொடர்ச்சியான பங்களிப்பை வழங்குவதற்கு இன்னும் உறுதியோடு செயல்படுகின்றோம். உங்களின் நம்பிக்கையும் ஆதரவுமே எங்கள் செயல்பாடுகளுக்கான ஆதாரமாகிறது, அதற்காக இன்னும் அதிக அர்ப்பணிப்போடு செயல்படுகிறோம். சரித்திரமாக போகும், இந்த இமாலய சாதனையைச் சாத்தியப்படுத்த, உறுதியோடு தொடர்ந்து உழைக்கும் எங்கள் ஊழியர்களுக்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் மனதார பகிர்கின்றோம். ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட். நிறுவனத்தின் வெற்றிப் பயணத்தில் உடன் பயணிக்கும் உங்கள் அனைவரின் பேராதரவோடு நூற்றாண்டு இலக்குகளை நோக்கி மற்றொரு அடி எடுத்து வைக்கின்றோம். சிகரம் தொடும் சவால்களிலும், வெற்றிக்கான படிகளிலும் ஒன்றிணைந்து நடைபோடுவோம்! வாருங்கள்!

## நன்றி! நன்றி! நன்றி!

**நம்பிக்கை, நாணயம், நேர்மை, நிலையான தன்மையுடன் மக்கள் சேவையில்**

| பதிவு அலுவலகம் | நிர்வாக அலுவலகம் | மத்திய அலுவலகம் |
|---|---|---|
| திருநெல்வேலி-627 006 | பள்ளத்தூர்-630107 | 219, அண்ணாசாலை, சென்னை-600 002. |
| போன்: 0462 2333474 | போன்: 04565 283477 | போன்: 044 28523386 |

sreevisalamchitfund

வாடிக்கையாளர் சேவை எண் : 8667003356

Sreevisalamchitfundltd


உடல் பிணிக்கு மட்டுமல்ல, வினைப் பிணிகளுக்கும்
உற்ற மருந்து வேல்மாறல் மகா மந்திரம்.
வினைகள் தீர்க்கும்
வேல்மாறல்
மகா மந்திரம்
( வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள்
தொகுத்தருளியது )
வினைகள் தீர்க்கும்
வேல் மாறல்
மகா மந்திரம்
தினமும் பாராயணம்
செய்யும் வகையில் எளிய நடையில் புத்தகமாக
வேல் வழிபாடு
வேல் மாறல் பொருள் விளக்கம்
வேல் மாறல் பாராயணம் செய்யம் முறை
முருகனின் முதற்கற்றளிக் கோயில்
என பல்வேறு தகவல்களுடன்
விலை
ரூபாய்
46/-
தபால் செலவு தனி
வெளியீடு : அனுஷம் புக்ஸ் - கோவை
புத்தகத்தினை ஆர்டர் செய்ய :
96590 32994
எண்ணிற்கு வாட்சப் செய்யவும்
தைப்பூச விரதநாட்களில் வேல்மாறல் பாராயணம் செய்து
செய்து கலியுக கடவுள் கந்தன் அருள் பெறுவோம்



PALLATHUR MOTORS LLP
SWITCH TO THE FUTURE
PETROL RIDER LIFE
SALARY வந்தா உடனே , பெட்ரோல் - க்கு ஒரு 2000 to 4000 தனியா வைக்கணும் !
PETROL STATION
ELECTRIC RIDER LIFE
SALARY வந்தா உடனே, Extra 2000 to 4000 Saving - ல கோல்டு வாங்கலாமா இல்ல, சீட்டு போடலாமானு யோசிக்கலாம்...!
ELECTRIFY YOUR JOURNEY NOW
Go far and wide with just a single charge
LECTRIX
Book Your TEST DR!VE Now!!
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735
பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும்
நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது.
பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள
ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும்
நமது மின்னிதழில் தங்கள் நிறுவனம் மற்றும் தங்கள்
சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய
நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

ஒரு பக்க விளம்பரத்திற்கான
கட்டணம் ரூபாய் 350/= மட்டுமே

ஓர் ஆண்டிற்கு ( 12 இதழ்கள் ) விளம்பரத்திற்கான
கட்டணம் – ரூபாய் 4000/= மட்டுமே

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை
நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**மேலும் விபரங்களுக்கு**

9791776534
naamnagarathar@outlook.com

# இந்த இதழில்....


**சான்றோர் சிந்தனை**

- வெற்றி என்பது நிரந்தரமா?
  தோல்வி நாளும் தொடர்ந்திடுமா? –கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. . . . . . . . . . . . 13

**சிறப்புக் கட்டுரை**

- முருகப் பெருமானின் முதல் கற்றளிக் கோயில் – பேரா.கு.அன்புமெய்யப்பன் . . . . 19

**பண்பாடு**

- நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள் – முனைவர் நா.வள்ளி சொக்கலிங்கம். . . . 30

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA . . . . . . . . . . 37

**மொழி**

- வாங்க பேசலாம்..! – பேரா. கு. அன்புமெய்யப்பன் . . . . . . . . . . . . . . . . . . . . . . 38

**கவிச்சோலை**

- குடியரசைப் போற்றுவோம் – கவிஞர் எம்.சோலை காரைக்குடி. . . . . . . . . . . . 43
- பண்பாட்டில் சிகரத்தார் – தஞ்சை பழ வள்ளியப்பன் மதுரை. . . . . . . . . . . . . . . . 80

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி . . . . . . . . . . . . 44

**படித்ததில் பிடித்தது**

- வெல்கம் டு பிராப்ளம்! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 47

**சமையல்**

- சேலம் குகை தட்டைப்பயறு கூட்டு குழம்பு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 52

**வரலாறு**

- நகரத்தார் பழனி பாதயாத்திரை வரலாறு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 56

**பங்குசந்தை**


- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...
  கார்த்திக் முத்தப்பன் நகரத்தார் கேப்பிட்டல் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 67

**நிதி மேலாண்மை**

- Carbon capture and storage (CCS)/ Carbon Credits.
  – கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 76

**ஜோதிடம்**

- ஜாதகத்தில் 5 ஆம் இடம். பூர்வபுண்ணியமும்.. வாழ்க்கை நலனும்
  –ஜோதிடர் எல்லி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 81




GET IT ON Google Play

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

உ

VALATHI
2005

# திருச்சி ஸ்ரீ வளத்தி
# சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்திஸ்ரீ சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

## எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு

**ரூ. 1,00,000/- முதல்**

**ரூ. 30,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை

பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064
0431-7968005

துவக்கம்
2005

94439 86143

# TRICHY SHREE VALATHI CHITFUNDS (P) LTD.

## VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6–வது கிராஸ் – கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1),அருணோதயா அபார்ட்மென்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம், பழைய சொக்கநாதர் கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001. Cell : 89034 90064.

tvcfpl@gmail.com www.valathichits.com

★ வாய்மையே வெல்லும் ★

# வெற்றி என்பது நிரந்தரமா? தோல்வி நாளும் தொடர்ந்திடுமா?



– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

மனிதன் பல்வேறு போராட்டங்களுக்குப் பின்னால்தான் வெற்றி அடைகிறான். வெற்றி பெற்று சாதித்துவிட்டால், அந்த வெற்றியை அவன் தக்க வைத்துக்கொள்ள முனைய வேண்டும். மாறாக அந்த மனிதனோ, நான் வெற்றி பெற்று விட்டேனே! இனிமேல் என்னை எவனாலும் இங்கே வெற்றி கொள்ள முடியாது என்ற ஆணவத்தில் வெறியனாக மாறிவிடுவான் என்றால், மிக விரைவில் அவன் தனது இடத்தை இழக்கப் போகிறான் என்பது தான் உண்மையாகும். "வெற்றியாளன்" என்ற பட்டத்தை, எந்த மனிதனாக இருந்தாலும் தக்க வைத்துக் கொள்வது என்பது அவ்வளவு எளிதல்ல.



மாமன்னர்களின் வரலாற்றை நீங்கள் சற்று புரட்டிப்படித்துப் பாருங்கள். அப்போது தான் நான் சொல்லும் கருத்து உண்மை என்பது புரியும். "வெற்றி என்பது நிரந்தரமல்ல!' என்பதும் நன்கு புரியும். இந்தப் பொல்லாத உலகம் என்ன செய்யும் தெரியுமா?



வெற்றி பெற்ற ஒருவனைப் பார்த்து,"இனி நீ ஒரு நாளும் தோல்வி அடையப் போவதில்லை!" என்று சொல்லி அவனைத்தங்கள் வசப்படுத்தப் பார்க்கும்.



நம்மை யாரும் தோற்கடிக்க முடியாது என்ற ஆணவமே ஹிட்லரையும், முசோலினியையும் வீழ்த்தியது என்பதையும் நீங்கள் மறந்து விடக்கூடாது.

உலகப்போரில் வென்ற சர்ச்சில், ஆணவத்தின் உச்சியில் திகழ்ந்த காரணத்தால், தனது நாட்டில் நடைபெற்ற உள்ளூர் தேர்தலில் வெற்றிபெற முடியாமல் தோற்றுப் போனார். அதேபோல புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் டான்பிராட்மேன் பல சதங்களை கிரிக்கெட்டில் குவித்தவர், தான் கடைசியாக ஆடிய கிரிக்கெட் ஆட்டத்தில் எடுத்த ரன் பூஜ்ஜியம் மட்டுமே!

நண்பர்களே! வெற்றி பெறுகின்ற போது நாம் மிகுந்த எச்சரிக்கை யாக இருக்க வேண்டும். செல்வம் சேருகின்ற போதும் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும்.



என்னுடைய கல்லூரிப் பேராசிரியர் ஒருநாள் "வெற்றி" குறித்து எங்களுக்குப்பாடம் எடுத்த போது, ஒரு "சேவல் சண்டை"யைப் பற்றி எடுத்துச் சொன்னார். அந்தக்கதை என் ஆழ்மனதில் தங்கிய கதையாகும்.

ஒரு ஊரிலுள்ள குப்பை மேட்டில் இரண்டு சேவல்கள் தங்களுக்குள்ளே சண்டையிட்டுக்கொண்டன. அதில் வலிமையான சேவல் இன்னொரு சேவலோடு கடுமையாகச் சண்டையிட்டு, போட்டிச்சேவலை ஊருக்கு வெளியே விரட்டி அடித்து,வெற்றி பெற்று விட்டது. உடனே அங்கிருந்த கோழிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, வெற்றிபெற்ற சேவலைப் பாராட்ட ஆரம்பித்தன.

அதன் காரணமாக அந்தச் சேவலுக்கு கர்வம் அதிகமானது. தன்னுடைய பலம் ஊர்முழுவதும் தெரிய வேண்டும் என்று விரும்பியது. அதனால் அடுத்த தெருவில் இருந்த உயரமான வீட்டின் உச்சியில் போய்த்தன் இறக்கைகளை படபட என்று அடித்தது. அதன் மூலம் எல்லோரின் கவனத்தையும் தன்பக்கம் திருப்பியது.



"எல்லோரும் என்னைப் பாருங்கள்! நான் தான் நேற்று நடந்த சேவல் சண்டையில் வெற்றி பெற்ற சேவல். எனக்கு ஈடாக, வலிமைமிக்க சேவல் இந்த ஊரில் வேறு எங்காவது இருக்கிறதா?"என்று கொக்கரித்தது.

அப்போது அந்த வீட்டின் வழியாகப்பறந்து கொண்டிருந்த பெரிய கழுகு ஒன்று, அந்த கொக்கரித்த சேவலைத்தனது கூரிய நகங்களால் குத்திக் கிழித்து மேலே தூக்கிச்சென்றது. வெற்றி தந்த கர்வத்தால் கொக்கரித்த சேவல், கழுகுக்கு உணவாகிப் போனது.

அந்தச் சேவலைப் போல மனிதர்களாகிய நாம் வெற்றியால் ஒரு போதும் கர்வம் கொள்ளக்கூடாது. நம்முடைய முன்னேற்றங்களைக் கண்டு நாம் மகிழலாமே தவிர அதீதமாக மகிழ்ச்சியோ, அகந்தையோ கொள்ளக்கூடாது.

நம்மைக்கண்டு நாமே வியந்து நின்றால் ஒருநாளும், அதற்கு அடுத்த நிலையை அடைய முடியாது. நண்பர்களே! என்னை யாருமே வெற்றி கொள்ள முடியாது என நினைப்பவர்கள் எல்லோரும் பரிதாபமான தோல்வியைத் தான் தழுவியிருக்கிறார்கள். அத்தகைய தோல்வியோ, நிகழ்வோ அடுத்தவர்களின் சூழ்ச்சியால் நிகழ்ந்திருக்கலாம், அல்லது உங்களது கவனக் குறைவால் நிகழ்ந்திருக்கலாம். ஒருவேளை உங்களது பலவீனங்களால் நிகழ்ந்திருக்கலாம். எச்சரிக்கையோடு நீங்கள் திகழாமல் இருந்ததால் நிகழ்ந்திருக்கலாம். உங்களது அதீத நம்பிக்கையால் கூட நிகழ்ந்திருக்கலாம்.

நீங்கள் பெற்ற அடுத்தடுத்த வெற்றிகள், நம்மைத்தவிர வேறு யாரும் வெற்றியாளர்கள் இல்லை என்று உங்களை எண்ண வைத்துவிடுகின்றன. வெற்றி என்பது நிராந்தரமல்ல! அதே நேரத்தில் நீங்கள் பெற்ற தோல்வி என்பதும் தொடர்கதை அல்ல! என்பதை மறந்து விடாதீர்கள்.





விலங்குகளில் மிகப்பெரிய விலங்கான யானையிடம் இருந்து நாம் ஒன்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். யானை மிகக்கவனமாக திகழக்கூடிய விலங்காகும். எந்த நேரத்திலும் மிகச் சிறிய பூச்சிகள் கூட தனது காதில் நுழைந்து விடக்கூடும் என்ற உணர்வில், தனது இரண்டு பெரிய காதுகளை எப்போதும் ஆட்டிக் கொண்டே இருக்கும். யானையின் இந்தச் செயலை நீங்கள் பார்த்து இருப்பீர்கள். அது சொல்லும் பாடத்தைப் படிக்க மறந்திருப்பீர்கள். வாழ்க்கை என்பது மிகவும் விசித்திரமானது.வெற்றி உங்களுக்கு விவேகத்தை தரவேண்டுமே தவிர, உங்களை அது வெறியனாக மாற்றி விடக்கூடாது என்பதை என்னாளும் நினைவில் வையுங்கள்!

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன் நண்பர்களே! அதுவரை இந்தத் தலைப்புக் குறித்துச் சிந்தியுங்கள்! தோழர்களே! என்ன சரிதானே!

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com



# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment NKF

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani

1983 - 2024
42nd ANNIVERSARY

1 Lakhs to Crore

**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

## Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |


# முருகப் பெருமானின் முதல் கற்றளிக் கோயில்

## அருள்மிகு பால சுப்பிரமணியர் திருக்கோயில் – கண்ணனூர், திருமயம்



பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

ஆதி மக்களின் வாழ்வு முதன்முதலில் தொடங்கிய இடம் மலை என்று அறிஞர்கள் கூறுவர். பாதுகாப்பிற்காக மலையில் வாழ்ந்த மனிதன் காலம் செல்லச் செல்ல நிலங்களிலும் வாழத் தலைப்பட்டுள்ளான். "குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான்" என்பது பழம்மொழி. எங்கெங்கு மலைகள் இருக்கிறதோ அங்கெல்லாம் முருகன் இருப்பான். மலைப் பகுதிகளில் இருந்த முருக வழிபாடு எப்படி நிலப்பகுதிக்கும் வந்தது? என்ற கேள்வி எழலாம்.



மனிதன் மலையில் வாழ்ந்த காலத்திலேயே வணங்கிய தெய்வம் தான் முருகன். பின் நிலத்தில் வாழ்ந்த மனிதன் அம் முருகனையே வணங்கிவந்துள்ளான். தமிழின் மிகப் பழைமையான நூல் தொல்காப்பியம். அந்நூலில் முருகன் "சேயோன்" என அழைக்கப்படுகிறான். ஆகவே, தமிழரின் மிகத் தொன்மையான தெய்வம் முருகன் என்பதில் ஐயமில்லை.



## திருக்கோயில் அமைவிடம்

இந்த இதழில் நம் நகரத்தார்களின் 96 ஊர்களில் ஒன்றாக இருந்த கண்ணனூரில் முற்கால சோழர்கள் காலத்தில் முருகப் பெருமானுக்காக கட்டப்பெற்ற முதற் கற்றளிக் கோயிலான "பாலசுப்பிரமணியர் * திருக்கோவிலைப் பற்றி காண இருக்கிறோம்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுகாவில் உள்ள கண்ணனூர் எனும் கிராமத்தில், பெரிய ஏரிக்கரையில் அமைந்துள்ளது சுப்பிரமணியன் திருக்கோயில். இவ்வூர் திருமயம் அருகில் துர்வாசபுரத்திலிருந்து 3 கி.மீ தொலைவில் இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது.

## திருக்கோயில் வரலாறு



கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் கட்டப்பட்டது இத்திருக்கோயில். சோழ அரசர்களில் புகழ்பெற்ற முதலாம் ஆதித்த சோழனின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டுள்ளது. அவனது ஆட்சிக் காலம் கி.பி.880 முதல் 908 வரை. அக்காலகட்டத்தில் அவனால் நன்கொடை வழங்கிய கல்வெட்டு இக்கோயிலின்

மகாமண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. பாண்டியர்களின் கலைப்பாணியில் கட்டப்பட்டுள்ளது. கோனாடு மற்றும் பாண்டிய நாட்டை ஒட்டிய பகுதிகளில் முதலாம் ஆதித்த சோழனின் ஆட்சி பரவிய காலத்திற்கு முன்பே, அதாவது கி.பி.880ஆம் ஆண்டிற்கு முன்பே இது கட்டப்பட்டிருக்கலாம். நன்கொடை கல்வெட்டு காணப்படும் மகா மண்டபம் முதலாம் ஆதித்த சோழன் ஆட்சிக் காலத்திலேயே கட்டப்பட்டுள்ளது.

## முதல் கற்றளிக் கோயில் :



தமிழகத்தில் எழுந்த முருகன் கோயில்களில் முதல் கற்றளிக் கோயில் (தரைமுதல் கோபுரம் வரை அனைத்தும் கற்களால் கட்டப்பட்டது) இக்கோயிலென்பது தனிச் சிறப்பு.

சாலையை ஒட்டியே இக்கோயிலைக் காணமுடிகிறது. மிக அழகாக, பார்வைக்குக் கவர்ச்சியாக இக்கோயில் அமைந்துள்ளது. கருவறை, முகமண்டபம், அந்தராளம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது.

விமானம், முகமண்டபம், இடைநாழி, பெருமண்டபம், படிக்கட்டு, மண்டபம், திருச்சுற்று, திருமதில், கோபுரம் என்ற கட்டமைப்பில் இத்திருக்கோயில் உள்ளது.

தேவகோட்டங்களுள் தென்புறக் கோட்டத்தில் தட்சிணா மூர்த்தி அமர்ந்த நிலையில் அருள்பாலிக்கிறார். இவரது திருவடிகளில் முயலகன் இருக்கிறார். மற்ற கோட்டங்கள் வெறுமையாக அமைந்துள்ளன. கோயிலின் நான்கு புற மூலைகளிலும் வெளிப்புறம் பார்த்தவாறு நின்ற நிலையில் நான்கு யானைகளின் உருவங்கள் செதுக்கப்பட்டள்ளன.

## மூலவர் " பாலசுப்ரமண்யர் "



முருகப் பெருமான் பக்தர்களுக்குக் காட்சி தரும் திருக்கோலங்கள் பதினாறு. அவை, ஞானசக்திதரன், கந்தன், கஜவாகனன், சரவணபவனன், துவசேனாபதி, சுப்பிரமணியன், கார்த்திகேயன், குமரன், சண்முகன், தாரகாரி, வள்ளி மணாளன், பாலமுருகன், சேனாளி, கிரெஞ்சபேதன், சிகிவாகனன், பிரம்ம சாஸ்தா என்பன. அவற்றில் ஒன்றான பாலசுப்பிரமணியர் திருக்கோலத்தில் அருள்பாலிக்கிறார். கிழக்குப் பார்த்த திசையில் காட்சி தருகிறார். நான்கு கரங்கள். வலது மேற்கையில் திரிசூலம் உள்ளது. வலது கை அபய ஹத்தமாக பக்தர்களுக்கு அடைக்கலம் அளிக்கிறது. இடது மேல் கை ஆயுதம் ஏந்தியும், இடது கை இடுப்பில் ஊன்றிய நிலையிலும் உள்ளன. இரண்டு தோள்களின் குறுக்காக ருத்ராட்ச மாலை அணிந்துள்ளார். கால்களில் தண்டைகள் உள்ளன. ஆனால், கையில் வேல் இல்லை. திருத்தணி முருகனும் கையில் வேல் இல்லாமலேயே காட்சி தருவார்.



அலங்காரத்தின் போது மட்டுமே தனியே வேல் வைத்து வழிபடுவர். இக்கோயிலிலும் அம்முறையே பின்பற்றப்படுகிறது.

மூலவரான முருகன் மிகவும் சக்தி வாய்ந்தவராகக் இருப்பதால், கருவறைக்கு நேராக வாசல் இருந்ததை அகற்றி அங்கு பலகணி எனப்படும் சன்னல் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், கோயிலின் பக்கவாட்டில் தெற்கு நோக்கி வாசல் அமைக்கப்பட்டுள்ளது. இச்சன்னலில் 9 துவாரங்கள் உள்ளன. இதன் வழியே முருகனைத் தரிசிக்க கிரகதோசம் நீங்கும் எனக் கூறப்படுகிறது.

கருவறை சுவரில் உள்ள தூண்கள், பூதகணங்கள், மேற்கூரைகள் கலை நயத்துடன் செதுக்கப்பட்டுள்ளன. அர்த்தமண்டபத்தில் மயில்வாகன முருகன் சன்னதி ஒன்றும் உள்ளது. இச்சிலை பிற்காலத்தில் பிரதிஷ்ட்டை செய்யப்பட்டிருக்கலாம்.

## யானை வாகனன்



அம்முருகனின் வாகனம் எது எனக் கேட்டால், மயில் என சிறு குழந்தை கூட கூறிவிடும். ஆனால், மயில் மட்டும் முருகனின் வாகனமல்ல. ஆடு, குதிரை, யானை முதலியனவும் வாகனங்களாக இருந்திருக்கின்றன.


யானை வாகனமான புராணக் கதையாக ஒன்று கூறப்படுகிறது. திருச்செந்தூரில் சூரனை வதம் செய்து தேவர்களைக் காத்தார் முருகன். அதற்குப் பிரதிபலனாக இந்திரன் தன் மகளான தெய்வயானையை மணம் முடித்து வைக்கிறார்.

திருமணம் முடிந்ததும் தெய்வயானையுடன் திருத்தணியில் போய் அமர்ந்தார். தெய்வயானைக்குச் சீதனமாக ஐராவதம் யானை வழங்கப்பட்டதாகப் புராணம் கூறுகிறது. எனவே, திருத்தணியில் உள்ள முருகப் பெருமான் ஆலயத்தில் முருகனின் வாகனமாக யானையே உள்ளது. இவ்வாறு முருகனது வாகனமாக யானை வந்தது.

பிணிமுகம் என்று அந்த யானை அழைக்கப்படுகிறது. யானை மேலுள்ள முருகனின் கோலத்தைக் குமார தந்திரம் போன்ற பல நூல்கள் சொல்கின்றன.

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர்,
"வேழம் மேல்கொண்டு"
"அங்குசம் கடாவ ஒரு கை"
"ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி"

என்றெல்லாம் பாடுவதன் மூலம் தொடக்க காலத்தில் முருகனின் வாகனமாக யானை பெரிதும் போற்றப்பட்டுள்ளது.



1. பிரான்மலை முருகன்
2. நாகப்பட்டினம் மாவட்டம் தில்லையாடிக்கு அருகில் உள்ள திருவிடைக்கழி முருகன்
3. திருத்தணி முருகன்
4. சுவாமி மலை முருகன்
5. உத்திர சுவாமி மலை முருகன் ( போபால்)
6. உத்திர மேரூர் குமரன் குன்றம்
7. கண்ணனூர் பாலசுப்பிரமணியர் கோயில்.

இக்கோயிலும் அத்தகைய யானையை வாகனமாகக் முருகனுக்கு வாகனமாக கொண்டுள்ளது. மகாமண்டபத்தில் கருவறையின் நேர்கோட்டில் பலிபீடமும் அதன் வலப்புறத்தில் யானைவாகனம் நிறுவப்பட்டுள்ளது. மகாமண்டபத்தின் வடபுறச் சுவரை ஒட்டி 1 ½ அடி உயரம் கொண்ட மேடை அமைந்துள்ளது.

## விழாக்கள் :



தினமும் ஒரு கால பூசை நடைபெறுகிறது. வருடம் தோறும், வைகாசி விசாகம், கந்த சஷ்டி, திருக்கார்த்திகை, தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடக்கின்றன. தைப்பூச நன்னாளில் அன்னதானமும் இத் திருக்கோவிலில் நடைபெறுகிறது.

சமீப காலமாக, கண்ணனூர் முருக பக்தர்கள் பலர் ஒன்றிணைந்து, பூசைகள் தொடர்ந்து நடைபெற ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறார்கள்.

வைகாசி விசாகத்தன்று 2024 முதல் திருப்புகழ் முற்றோதல் நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

இத் திருக்கோவில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலும், கோயில் தொடர்பான பராமரிப்பு தொல்லியல் துறையின் வசமும் உள்ளது.

## ஆலய மகிமை :



இத்திருக்கோவில் குறித்து மதுரை – வேதாங்கக் கல்விப் பயிற்சி அறக்கட்டளை நிறுவனரும், சோதிட ஆய்வாளருமான ஆச்சார்யா ஜயகண்ணன் அவர்களிடம் கலந்துரையாடிய போது, அவர் இந்த "ஆலய மகிமைகள்" குறித்து கூறிய "சோதிட ரீதியான" "விளக்கங்கள்" – ஆச்சர்யம் அளித்தது. அவர் கூறியதாவது...

சோதிட ரீதியாக செவ்வாய் கிரகத்திற்குரிய அதி தேவதை – முருகப் பெருமான் ஆகும். அதே போல், கேது கிரகத்திற்குரிய அதி தேவதை – யானை முகன் விநாயகர் ஆகும்.அதுவல்லாமல், யானை – குரு பகவானைக் குறிப்பதுமாகும்.

இந்த கண்ணனூர் – பால சுப்ரமணியர் திருக்கோவிலில் மூலவராகிய முருகப் பெருமான் – யானை வாகனத்தையே, தமது இருப்பிடத்தில் கொண்டு, அருள்பாளிப்பதால் ஒருவரது ஜாதகத்தில் குருவும் செவ்வாயும் தனித்தோ, அல்லது சேர்ந்தோ அல்லது



பார்த்தோ... தோஷம் ஏற்பட்டிருந்தால், இத்திருத்தல முருகப் பெருமானுக்கு உரிய தான,அபிஷேக,அர்ச்சனை, ஆராதனைகளைச் செய்து, நவ நெய் விளக்குகளை ஏற்றி வைத்து, முருகனின் ஆறெழுத்து மந்திரத்தை

– மனதில் உச்சரித்துக் கொண்டே, யானை வாகனத்தோடு சேர்த்து, வலமாக, திருச் சன்னதியை ஒன்பது முறை சுற்றி வழிபாடு செய்தால், முருகப் பெருமானின் திருவருளால்...யாமிருக்க பயமேன்!... என்ற அருளாசியைப் பெறலாம்.சத்துரு நாசம் ஏற்படும்!


அத்தோடு, இத்திருக்கோவில், செவ்வாய் தோஷத்தை – முற்றிலுமாக நிவர்த்தி செய்வதோடு, ஆண்–பெண்களுக்கு திருமண பாக்கியத்தையும், செவ்வாய்க்கான – முருகப்பெருமானின் திருவருளால் வாக்கு சித்தியும் வழக்குகளில் வெற்றியும் ஏற்படுவதோடு, இரத்தகாரகர் செவ்வாய்க்குரிய அதி தேவதையாகிய முருகப் பெருமானால் இரத்த சம்பந்தமான நோய்களிலிருந்து விடுதலை கிடைக்கும். இரத்த உறவுகளிடையே ஏற்பட்ட (மண், நிலப்) பிரச்சனைகள் சுமுகமாகும்.

கரு காரகர் குருவின் திருவருளால்... குழந்தைப் பேறும், தன காரகர் குருவின் அருளாசியால்... தன பிராப்த்தியும் ஏற்படுவது திண்ணம்! என்கிறார்.

## தினசரி வழிபாடு :

திரு.மூர்த்தி என்ற சுப்பிரமணியன் குருக்கள் அருகில் உள்ள துர்வாச புரத்திலும் அர்ச்சகராகச் செயல்படுவதோடு, ஒரு கால பூசையாக காலை 11.00 மணி அளவில் கண்ணனூர் முருகன் கோயிலுக்கும் தினந்தோறும் சென்று தவறாது பூசைகளைச் செய்து வருகிறார். அவரது அலை பேசி எண் – 94427 62219.





அவர் கூறும் போது, திருச்செந்தூருக்குச் சமமானது இக்கோயில். நவதுவாரங்கள் வழியாக சுப்பிரமணியனை வழிபட்டால், திருமணத் தடை நீங்கும், மேலும், வேலை வாய்ப்பு கிடைக்கும் என்கிறார்.

## முருகனின் அதிசயம் :

ஒரு முறை, அவர் பூசை செய்வதற்காக இக்கோவிலிற்கு வந்த போது, ஒரு பெண் அங்கு அமர்ந்து இருந்திருக்கிறார். இவரைக் கண்டதும், "சாமி! நான் வெளியூரிலிருந்து வந்திருக்கிறேன். என் மகன் நெடுநாட்களாகப் பேசவில்லை. பல கோயில்களுக்கும் சென்று மன முருக வேண்டி வந்து விட்டேன். ஆனாலும் அவன் பேசவில்லை. ஒருவர் இக்கோயிலைப் பற்றிக் கூறினார். ஆகவே, இம்முருகனையும் வேண்டிக் கொள்ள வந்தேன்" எனக்குப் பிரசாதம் தாருங்கள். என் மகனிடம் கொடுத்து உண்ணச் செய்கிறேன்" என்றிருக்கிறார். அவர் நைவேத்தியம் செய்வதற்கான பொருட்கள் எடுத்துவராத நிலையில், குருக்களே அவற்றை வைத்து அங்கு பிரசாதம் தயார் செய்து கொடுத்திருக்கிறார்.

அதனை முழு நம்பிக்கையுடன் வாங்கிச் சென்ற அப் பெண் சில நாட்கள் கழித்து பேசியிருக்கிறார். "பாலசுப்பிரமணியனின் அருளால் இது நாள் வரை பேசாமல் இருந்த என் மகன், பிரசாதத்தை உண்ட சில நாட்களில் பேசிவிட்டான்" என்று மிக்க மகிழ்ச்சியுடன் சொன்னதாக குருக்கள் கூறியது மெய்சிலிர்க்கச் செய்தது.



## முருக பக்தர்களிடம் வேண்டுவது :





முருகனுக்கான முதல் கற்றளிக் கோயிலான இந்திருக்கோயில் அதிகமாக மக்களிடம் சென்று சேராத நிலையில், இத்திருக்கோயில் பெருமைகளை அனைவரும் அறிந்து முருகன் அருள் பெற முருக பக்தர்கள் அனைவரும் உதவுவதோடு திருக்கோயில் திருப்பணிகளிலும், வழிபாடுகளிலும் பங்கு பெறுதல் வேண்டும்.

இறைத் தொண்டு செய்தால், மனம் அமைதி பெறும். கர்ம வினைகள் நீங்கும். ஊர் கூடித் தேர் இழுப்பது போல், அனைவரும் இறைத் தொண்டு புரிவோம். இணையில்லா கண்ணனூர் முருகனருள் பெறுவோம்.

"முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே – ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்".

(திருமுருகாற்றுப்படை – தனிப்பாடல்)





# நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள்



முனைவர்
நா.வள்ளி சொக்கலிங்கம்
மேனாள் முதல்வர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

பண்படுவது பண்பாடு. பன்நெடுங்காலத்திற்கு முற்பட்டே பண்பட்ட சமூகம் நகரத்தார் சமூகம். நகரத்தார் சமூகத்தின் பண்பாட்டு மரபுகள், வரலாற்று நிகழ்வுகள், சமூகப் பங்களிப்புகளை அழகாகப் பதிவு செய்துள்ள சிறப்பு நூல் "நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள் "

இந்த நூலினை நமக்களித்த பேராசிரியர் முனைவர்.வள்ளி சொக்கலிங்கம் அவர்களை நகரத்தார் வரலாற்றின் கலைக்களஞ்சியம் என்று கூறுவது மிகை ஆகாது. அவரது முனைவர் (Ph.D)பட்ட ஆய்வே, நகரத்தாரின் அறப்பணிகள் என்னும் தலைப்பைக் கொண்டது. தமிழகத்தின் ஒரே தனித் தமிழ்க் கல்லூரியான காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியில் 32 ஆண்டுகள் பேராசிரியர் மற்றும் முதல்வராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். தமிழகம் அறிந்த கல்வெட்டுத் துறை ஆய்வாளர். சிவகங்கை மாவட்டப் பகுதிகளில் பல கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், முதுமக்கள் தாழிகள் ஆகியவற்றை கண்டறிந்து வெளிப்படுத்தியவர். அவரது மொத்த அனுபவங்களின் வெளிப்பாடே அவர் எழுதிய "நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள்" எனும் நூல்.

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் மூலம், இந்த மதிப்புமிக்க நூலின் உள்ளடக்கங்களை மாதாந்திரமாக வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். இந்த தொடர் கட்டுரைகளின் உள்ளடக்கம் நமது சமூக மரபுகளைப் பாதுகாக்கவும், அடுத்த தலைமுறைகளுக்கு அறிவிக்கவும் உதவும். ஒவ்வொரு மாதமும் வெளிவர இருக்கும் இந்த தொடர் மூலம் நகரத்தார் சமூகத்தின் தனித்துவமான பண்பாட்டு செல்வத்தை அனைவரும் அறிந்து கொள்ளலாம்.



நகரத்தாரின் பண்பாட்டுப் பதிவுகள் – 1

# கல்கத்தாவும் காவிரிப்பூம்பட்டினமும்

நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கிடையே தொன்றுதொட்டு இருந்துவரும் பழைய கலாச்சாரப் பண்பாடுகள் பழைய தமிழ்ப் பண்பாடுகளாக இருப்பதனாலே அவை மறைந்து போவதற்கு முன்பே, தக்க ஆராய்ச்சிக்காரர்கள் அப்பண்பாடுகளை எல்லாம் ஆராய்ந்து புத்தகமாக எழுதிப் பாதுகாக்க வேண்டும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோள்" என்று சிறந்த தமிழறிஞரும்








கல்கத்தாவும் காவிரிப்பூம்பட்டினமும் கடற்கரை நகரங்கள். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வணிகர்களாகிய நகரத்தார்கள் பாண்டிய நாட்டுக்குப் புலம்பெயர்ந்த போதும் தங்களது இயல்பான கடல்கடந்து பொருளீட்டும் மரபை விட்டுவிடவில்லை. தமிழகத்தில் எந்தெந்தக் கடற்கரை நகரங்களிலிருந்து புறப்படுகிறார்களோ



அங்கெல்லாம் தாங்கள் தங்குவதற்கு வசதியாக நகரவிடுதிகள் கட்டிக்கொள்வது அவர்களது வழக்கம். அதுபோலவே 1800 ஆம் ஆண்டளவில் கடல்மார்க்கமாகக் கல்கத்தா சென்ற நகரத்தார்கள் முதலில் அங்கு நகர விடுதி அமைத்துக் கொண்டு வணிகத்தில் ஈடுபட்டனர். கல்கத்தா

நகர விடுதியில் உள்ள பின்வரும் கல்வெட்டு அதை விளக்குகிறது.



"உ நீலமாமிடற்றால வாயினான்

பாலதாயினார்ஞாலமாள்வரே மங்களம்

நாட்டுக்கோட்டைத் தனவைசிய நகரத்தார்கள் தொழில்முறை முதன் முதலில் செய்ய முயன்ற துரமுக ஊர்கள் ஐந்து. அதாவது நாகூர், சென்னை கல்கற்றா, காலி, பினாங்குமேயாகும். இவடத்திற்கு, நம்மிட பிள்ளைகள் வந்து சக்திவேல் ஸ்தாபித்து தொழில்



ஆரம்பித்து நடந்து வருகிறதும் நாளதுவரையில் ளஉய (120)வருஷம் ஆகிறது. நாட்டுக்கோட்டை நகரத்தார் பெரியவீடு 1921".

கல்கத்தாவில் மட்டும் நகரத்தார்களுக்கு சுமார் 125 கடைகள் இருந்ததாக அறிகிறோம். கி.பி.1867 ஆம் ஆண்டு சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது. இதன் மூலம் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு வரும் கப்பல்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றி வராமல் சூயஸ் கால்வாய் வழியாக

[3] பட்டணம் = பெருநகரம்.
பட்டினம் = கடற்கரை நகரம்.

வந்து சென்றன. அதனால் நகரத்தார்கள் அதிகம் பயனடைந்தனர்.

கல்கத்தாவிலிருந்து பர்மாவிற்கு (மியான்மர்) நகரத்தார்கள் சென்ற போது பர்மாவில் மண்வளமும் நீர்வளமும் வற்றாத ஜீவநதியாகிய ஐராவதி ஆறும் இருந்தும்கூட உழைப்பவர்களுக்குப் பொருளுதவி செய்பவர்கள் இல்லாத காரணத்தால் பர்மிய நிலங்கள் காடுமேடாகக் கரடுமுரடாகக் கிடந்தன.

இந்நிலையில் கல்கத்தாவிலிருந்து பர்மா சென்ற நகரத்தார்கள் தங்கள் முயற்சியால் அங்குள்ள மக்களுக்குப் பொருளுதவி செய்து அந்நிலங்களைப் பொன்விளையும் பூமியாக்கினர். பிறகு பர்மாவிலிருந்து அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டு உலகச் சந்தையில் முதலிடம் பெற்றது. நகரத்தார்களது சரக்குகளை ஏற்றிக்கொண்டு, கப்பல்கள் பர்மாவிலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் வருவதும் போவதுமாக இருந்தன.



நகரத்தார்களது கடல்வணிகத்தால் லாபம்ஈட்டிய கப்பல் கம்பெனிகள் ஆண்டு இறுதியில் ஏற்றுமதி செய்த பொருட்களுக்குக் கப்பல் கட்டணத்திற்காகச் செலுத்திய தொகையில் நூற்றுக்கு ஐந்து சதவீதம் எனத் திருப்பிக் கொடுத்தன. இவ்வாறு கிடைத்த தொகையைப் பொதுநிதியாக வைத்திருந்து தருமத்திற்குச் செலவிடுவதென கல்கத்தாவில் வணிகம் செய்த நகரத்தார்கள் முடிவெடுத்தனர். அவ்வகையில் அக்காலத்திலேயே ஆண்டுதோறும் 25 ஆயிரம் ரூபாய் வரை வருவாய் வந்து கொண்டிருந்தது என்று அறிகிறோம். அந்தப் பொருளைக் கொண்டும், கல்கத்தா நகரத்தார்கள் தங்களது வருவாயில் தருமத்திற்கென எடுத்து வைத்திருந்த பொருள்களைக் கொண்டும் வடநாட்டிலும், தென்னாட்டிலும் பல கோயிற்பணிகளைச் செய்தனர்.

கல்கத்தா நகரத்தார்களுக்கு 1812 முதல் இந்துக்களின் புனிதத் தலமான காசியோடு தொடர்பு ஏற்பட்டது. காசி விசுவேசுவரருக்குக் கட்டளைகள் பல ஏற்படுத்தினர். 1863இல் கங்கைக் கரைக்கு அருகில் அன்னதான மடமும் நந்தவனமும் பசுமடமும் அமைத்து, காசி விசுவேசுவரர் வழிபாட்டிற்குப் பால், மலர்கள் முதலியவற்றை அனுப்பி வைத்தனர். காசி அன்னதான மடம் தற்போது காசி நாட்டுக்கோட்டைச் சத்திரம் எனப்படுகிறது. காசியில் 'நாட்கோட் சத்திரம்' என்றால் தெரியாத வடநாட்டவர்களே இல்லை எனலாம். காசி விசுவநாதருக்கு நகரத்தார் கட்டளையாகத் திருவனந்தலும், உச்சிக்காலமும், அர்த்தசாமப் பூசையும் எக்காரணத்தாலும் ஒருவேளை கூடத் தடைப்படாமல் நடந்துவர ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

1942இல் நடந்த "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் போராட்டத்தின்போது காசியில் கலகங்கள் ஏற்பட்டு ஊரடங்குச் சட்டம் போடப்பட்து.



அப்போதும் அரசாங்கத்திடம் விதிவிலக்குப் பெற்று பூசைக்குரிய பொருட்களை உரிய நேரத்தில் காசி நாட்டுக்கோட்டைச் சத்திரத்திலிருந்து அனுப்பியிருக்கிறார்கள்.

ஒரு சமயம் காசி விசுவநாதரை வணங்க வந்த மைசூர் மகாராஜா அர்த்தசாமப் பூஜைக் கட்டளையைத் தாம் ஏற்று நடத்த விரும்பி, நகரத்தார்களிடம் கேட்டபோது, அத்தொண்டை விட்டுவிட மனம் வராமல் நகரத்தார்கள் அன்போடு மறுத்துவிட்டனர்.

காசி விசுவநாதர் கோயில் மகந்து (பூசாரி) பங்காளிகளுக்குள் கோயில் நிர்வாகம் பற்றி சச்சரவு உண்டாகி அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடந்தது. அப்போது நகரத்தார்களின் இறைப்பற்றையும், தொண்டையும் கண்ட அலகாபாத் உயர்நீதி மன்றம் காசி விசுவநாதர் கோயில் நிர்வாகத்தை ஏற்றுநடத்தும் பொறுப்பை நகரத்தார்களிடம் ஒப்புவித்துத் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இச்சம்பவம் நகரத்தார்களின் ஆன்மீகப்பணிக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் எனலாம்.

கல்கத்தாவில் பெருஞ்செல்வராய் இருந்த மோதிலால் ஷெல்லி என்பவர், அவருடைய சொந்த சிவன் கோயிலை நகரத்தார்களிடம் ஒப்புவித்துத் தொடர்ந்து நடத்திவரச் செய்திருக்கிறார் என்ற செய்தியை "நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு" என்ற நூலில் வயிநாகரம் அ.இராமநாதன் செட்டியாரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

1893இல் கல்கத்தா நகரத்தார்கள் அன்றைய மதிப்பில் ஒரு லட்சம் ரூபாய் செலவில் காசிவிசாலாட்சி கோயிலைக் கல்திருப்பணியாக்கிக் குடமுழுக்கு செய்திருக்கிறார்கள். காசிச் சத்திரத்தை ஒட்டி நகரேசுவர் ஆலயத்தைப் புதிதாக எடுத்தனர்.



இராணி அகல்யாபாய்க்குப் பிறகு சுமார் 250 ஆண்டுகள் கழித்து அண்மையில் காசிவிசுவநாதருக்கு நடந்த குடமுழுக்கை நாம் அறிவோம். அதுபோல காசி விசாலாட்சிக்கும் நகரேசுவரருக்கும் குடமுழுக்குகள் அண்மையில் நடத்தி இருக்கிறார்கள்.

காசியில் மட்டுமல்லாமல் கயா, அயோத்தி, பிரயாகை, நாசிக் பஞ்சவடி ஆகியதீர்த்த விசேடமுடைய தலங்களிலும் நகரத்தார்கள் சத்திரங்கள் ஏற்படுத்தி இறைத்தொண்டு செய்தனர். இன்றளவும் செய்து வருகின்றனர். இவை அனைத்தும் காசி நகரச் சத்திரத்தின்கீழ் சிறப்பாக இயங்கி வருகின்றன. மேலும் வடநாட்டிலுள்ள அரித்துவார், தாரகேசுவரம், திரியம்பகம், கோதாவரி ஆகிய தலங்களிலும் நகரத்தார்களது ஆன்மீகப் பணிகளைக் காணலாம்.

காவேரிப் பூம்பட்டினத்தையும் கல்கத்தாவையும் தங்கள் வணிகத்தால் இணைத்த நகரத்தார் சமூகம் மேன்மேலும் தொழில் துறைகளில் ஈடுபட்டு முன்னேறி, புள்ளிகள் பெருகி வாழ்வாங்கு வாழ கல்கத்தா சிங்கார முருகேசரின் அருள் என்றென்றும் கிடைக்கட்டும்.

"காசி நகரத்துக் கடவுளரைப் பேச வைத்தால்

காவிரிப்பூம் பட்டினத்தார் கலை உணர்ச்சி தெரியவரும்"


என்ற கண்ணதாசனின் வரிகள் முற்றிலும் உண்மை;
வெறும் புகழ்ச்சியில்லை.

– பதிவுகள் தொடரும்.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram



# மழலை மழைத்துளிகள்..!!!



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்

## யானைச் சவாரி



மெல்ல நடக்கும் யானை
... முறம்போல் காதுகள் இரண்டு
முன்னும் பின்னும் ஆட்டும்
... தும்பிக் கையோ ஒன்று
முழுதாய் வாழைச் சீப்பை
... கொடுத்தால் தீர்க்கும் தின்று
முதுகில் நானும் ஏற
... ஊரைச் சுற்றும் இன்று

## குட்டி முயல்



கிட்டு மாமா வீட்டுக் குள்ளே
... தோட்டம் இருக்குதே
கிட்ட கிட்ட ஓடி வரும்
... முயலும் இருக்குதே
பட்டுப் போன்ற மேனியை நான்
... தொட்டுப் பார்க்கவே
விட்டுக் குதித்து ஓடும் அழகைப்
... பார்க்க இனிக்குமே!



# வாங்க பேசலாம்..!

(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி – 20

– பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!

## உப்புப்பொரிதல்



"ஏண்டி! வசந்தா, ஊறுகாய் ஜாடிய தொறந்தே பாக்காம வச்சிருந்து, இப்ப பாரு! உப்புப் பொரிஞ்சு போச்சு! " என்பதில் உப்புப் பொரிதல் என்பது இயற்கையாக உப்புப் படிந்து போவதை இவ்வாறு குறிப்பிடுவர்.



## உப்பெடுத்தல்

உப்பெடுத்தல் என்பது நம்மவர்கள் திருமணத்தின் போது செய்கின்ற ஒரு சடங்கின் பெயராகும். மாப்பிள்ளை விட்டார் பெண் வீட்டிற்கு உப்பும், ஒன்பது வகையான தானியங்களையும், இசைபிடிமானம் எழுதுவதற்கு ஓலையும் எடுத்துச் செல்வது வழக்கமாக இருந்திருக்கிறது. இந்நிகழ்வு உப்பெடுத்தல் என்றழைக்கப்பட்டிருக்கிறது.

## உம் கொட்டுதல்

"அடியே! சாலா! நான் பேசிக்கிட்டே இருக்கேன். போனப் பாத்துகிட்டே உம் கொட்டிக்கிட்டிருக்க. நான் பேசுனது விளங்குனுச்சா? இல்லையா?"என்று அப்பத்தாக்கள் பேத்திகளிடம் பேசுவதைக் கேட்டிருக்கலாம். இங்கு உம் கொட்டுதல் என்பது, "உம்" என்னும் ஒலியிட்டு பிறர் பேசுவதைக் கேட்பதைக் குறிக்கிறது.

## உம்மணாமூஞ்சி



"சாந்திக்கலியாணத்துல உங்க தங்கச்சி, என் நாத்தனாவ பாத்தேன். உம்மணா மூஞ்சியாட்டமே தெரிஞ்சா. இவ சிரிச்சா என்ன? சிரிக்காட்டி எனக்கென்ன? என்று கணவனிடம் தன் மனக் குறையைக் கொட்டித் தீர்க்கும் மனைவிகள் உண்டு. இங்கு உம்மணா மூஞ்சி என்பது, உதடுகள் மூடிய நிலையில் சிரிக்காமலிருப்பது என்று பொருள் கொள்ளலாம்.

(உம் – உதடுகள் மூடிய நிலையில் பேசாமலிருக்கும் ஒலிக் குறிப்பு. உம் – உம்மணம், மூஞ்சி – முகம்.)



## உரக்கப் பேசு

ஏண்டா கதிரேசா! ஐயாவுக்கு காது சரியா கேக்காதுன்னு உனக்குத் தெரியாதா? உரக்கப் பேசுடா! அவுகளுக்கு நீ பேசறுது புரியலை" என்று ஆயாவின் குரல் வீடுகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன. இங்கு உரக்க என்பது சத்தமாக, அதிக ஒலியுடன் என்று பொருள்படும்.

## உருப்படி

"அப்பச்சி! அந்த வெள்ளி அடுக்குல எந்தன உருப்படி இருக்குன்னு பாரப்பச்சி"

என்று திருமணத்தின் போது பேரனிடம் ஆயாக்கள் கூறுவதில், உருப்படி என்பது எண்ணிக்கையைக் குறிக்கிறது. எத்தனை வெள்ளிப் பாத்திரங்கள் இருக்கிறது? அப் பாத்திரங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது.



"ஏண்டா! சிவனேசா! பர்மா போயி உங்கய்யா சம்பாதிச்சு அவ்வளவு பொன்னும் பொருளும் சேத்தாக. நீ என்னடா வீடுதான் பெரிசா கட்டியிருக்க.உருப்படியா ஒரு பொருளையும் காணோமே?" என்று ஐயாக்கள் பங்காளி வீட்டின் இளைஞர்களிடம் கேட்பதுண்டு. இங்கு உருப்படி என்பது பயனுள்ள என்று பொருள் தருகிறது. பயனுள்ள பொருள் எதுவும் இல்லை என்று குறிப்பிடுவதற்கு இச் சொல் பயன்படுத்தப்படுகிறது.

### உருப்போடுதல்

"ஏண்டா! கண்ணா! இது என்னடா எப்பப்பாத்தாலும் மூச்சவ, பேச்சவ பேர் சொல்லும் அழகவ" ன்னு உருப்போட்டுக்கிட்டே இருக்க. சாமி பாட்ட உருப்போட்டாலாவது புண்ணியம்டா" என்று பேசுவது வழக்கமாகிவிட்டது. இங்கு உருப்போடுதல் என்பது பலமுறை சொல்வதைக் குறிக்கும். மந்திரங்களையே திரும்பத் திரும்பச் சொல்லி உருப்போடுவது, மனப்பாடம் செய்வது வழக்கம்.

### உருவாஞ்சுருக்கு

"அப்பச்சி! மூட்டையெல்லாம் உருவாஞ்சுருக்காப் போடு. படுமுடிச்சாப் போட்டுறாத. படுமுடிச்சாப் போட்டுட்டா புது வீடு போயி பிரிக்க உடனே முடியாது" என்று கூறுவதில் உருவாஞ் சுருக்கு என்பது எளிமையாகப் பிரிக்கக் கூடிய முடிச்சு என்பதாகும். எளிதில் உருவுகின்ற சுருக்கு உருவாஞ் சுருக்கு எனப்படுகிறது.

### உல்லி (ஒல்லி)



"ராமனாதன் மகனப் பாத்தீகளா! நெடுநெடுன்னு ஒசரமா ஒல்லியா இருக்கான்" என்பதில், ஒல்லி என்பது மருவிய சொல். உல்லி என்பதே சரியான சொல். உல்லி என்றால் உயரமானது, மெலிவானது எனப் பொருள் படும்.




## உறுத்துதல்

ஏங்க! குருவிக்கொண்டான் பட்டியில. நான் மங்களச் சரம் போட்டுட்டுப் போனது நெறயப் பேரு கண்ண உறுத்துச்சு போல, நல்ல வேளை வீட்டுக்கு வந்ததும் கொக்கி கழண்டு கீழ விழுந்துருச்சு" என்பதில் உறுத்துதல் என்பது பொறாமைப் படுவதைக் குறிப்பாகச் சுட்டுகிறது.



சிலரின் கண்கள் கொள்ளிக்கண்களாக இருக்கும் என்பர். அவர்கள் பார்த்தால் அவர்கள்தம் கண்களின் கேட்டால் பிறருக்குத் தீமையே விளையும் என்றும், மயக்கம் கொண்டு கீழே விழுந்து விடுவார்கள் என்றும், காய்ச்சல் வரும் அல்லது நோய் ஏற்படும் என்றும் நம்பப்படுகிறது. அந்த வகையில் இங்கு உறுத்துதல் என்பது பொறாமையைக் குறிப்பிடுகிறது.

– தொடர்ந்து பேசுவோம்.



# குடியரசைப் போற்றுவோம்

முடி சூடிய மன்னர் ஆட்சி முடிவுக்கு வந்தது
ஜனநாயக மக்களாட்சி குடியரசைத் தந்தது

பண்பாடு மாறாத பாரதத்தின் தூண்களாய்
வல்லரசாய் மாறும் இந்த தேசத்தின் வேர்களாய்

ஜாதி மத பேதமற்ற பொதுவான வானமாய்
அரசியல் அமைப்புச் சட்டம் என்று பொழிகின்ற மேகமாய்



– கவிஞர் எம்.சோலை.
காரைக்குடி

ஊழலற்ற ஜனநாயகம் ஊனமின்றி நலமாக
போர் முரசு அமைதி கொள்ள அன்பு இன்னும் பலமாக

வெட்டிப் பேச்சு பேசாமல் வாளெடுத்து வீசாமல்
சமாதானக் கோடி பறக்க குடியரசு தினம் சிறக்க

வரி மேல் வரி விதித்து வருமானம் பாராமல்
தனி நபர் வறுமை போக்க காரணங்கள் கூறாமல்

மக்களால் ஆன அரசு மக்களுக்காய் சட்டம் போட
மாற்றான் தாய் மனமின்றி தொலை நோக்குத் திட்டம் போட

மனதில் வந்து பிறந்த விட்ட மழலை இந்த வாழ்த்து
குடியரசைப் போற்ற வரும் சிரம் தாழ்ந்த வாழ்த்து.

பெண் கதவு... ஆண் பூட்டு..! – 20

# மனைவி சொல்லே மந்திரம்




நல்லாசிரியர்
சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

அன்பு யார் மீதும் காட்டலாம் ஆனால் கோபம் உயிருக்கு மேலாக உரிமை கொண்டவர்கள் மீது மட்டுமே தான் காட்ட முடியும்.

ஒரு நாட்டை ஆண்ட மன்னன், தன் பட்டத்தரசியிடம் கேட்காமல் எதையுமே செய்ய மாட்டான். அவனுக்கு ஒரு சந்தேகம் "நாம் மட்டும் தான் மனைவிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ?" என்று சந்தேகத்தில் ஆண்கள் அனைவரையும் ஓரிடத்தில் திரட்டினான்.

"உங்களில் யார் மனைவியின் சொல்லுக்கு மரியாதை கொடுக்கிறீர்களோ அவர்கள் எல்லாம் வலப் பக்கம் வாருங்கள்" என்றான், ஒருவரைத் தவிர அனைவரும் வலப்பக்கம் வர மன்னனுக்கு மகிழ்ச்சி, ஆனால் ஒருவர் மட்டும் மனைவியின் துணையின்றி சொந்தமாக செயல்படுவதை எண்ணி வியந்து விசாரித்தான் மன்னன்,

"கூட்டமாக இருக்கும் இடத்தில் சேர்ந்து நிக்கக் கூடாது தனியாக நில் என என் மனைவி சொல்லி அனுப்பினாள், அதனால் தான் தனியாக நிற்கிறேன்" என்றான் அவன்.



மனைவி சொல்லே மந்திரம் என நடக்கும் இத்தகையோராலேதான் பல வீடுகளில் இல்லறம் இன்றளவும் நல்லறமாக இருக்கிறது.



புதிதாக கல்யாணம் ஆன கணவன் ஒருவன் தன் மனைவிக்குப் பிடிக்குமே என முறுக்கு வாங்கிவந்தான். அதை அவள் இரவு 10 மணியளவில் நொறுக் நொறுக்கென, சாப்பிட சத்தம் கேட்டு மறுநாள் அவன் அம்மா அவனை பிடி பிடி என்று பிடித்து விட்டாள்.

"ஏண்டா உன்னை பார்த்து பார்த்து வளர்த்து படிக்க வைச்சு, ஆளாக்கி கல்யாணம் பண்ணிக் கொடுத்தா, ஆத்தாவிற்கு இதுவரை ஏதாவது வாங்கிக் கொடுத்தியா, அவ கடக்கு, முடக்குனு சாப்பிடுறா, எனக்கு வயிறு பத்திக்கிட்டு எரியுது" என்று புலம்ப, மறுநாளிலிருந்து அம்மாவையும் ஏமாற்றக் கூடாது, மனைவியும் பாராட்ட வேண்டும் என்று அல்வா வாங்கி வந்தான். சத்தம் வராமல் மனைவியும் சாப்பிட்டாள், அடுத்தநாள் அம்மா சண்டைக்கு வராமல் சமாதானமானாள், தன் பேச்சை மகன் கேட்டு மதிக்கிறான் என்று, ஆனால் பெரும்பாலான கணவர்கள், மனைவியையும் அம்மாவையும் இப்படித்தான் சமாளித்துக் கொண்டு இருக்கிறார்கள்.





அம்மாவை ஏமாற்ற முதன் முதலில் அல்வா பயன்பட்டதால் அடுத்தவர்களை ஏமாற்ற அல்வா கொடுப்பது என்ற சொலவடை உருவாயிற்று என்பதே உண்மை, எங்கே போறீங்க.. அல்வா வாங்கவா.. சீக்கிரம் போங்க...





நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்

t.me/naamnagarathar
Join Telegram




# வெல்கம் டு பிராப்ளம்!


தெனாலி படம் பார்த்திருப்பீர்கள். எதைப் பார்த்தாலும் பயந்து நடுங்கிக் கொண்டிரு ப்பார் கமல். நம்மில் பலரும் அப்படித்தான். குறிப்பாக, பிரச்சனைகளைப் பார்த்து அதிகம் பயப்படுகிற குணம் நமக்கு உண்டு,



எனக்கு மட்டும் ஏன் இப்படிப் பிரச்சனைகள் வருகின்றன? இந்த ஆண்டவன் கருணை இல்லாதவ ன்? எவ்வளவு பேருக்கு நான் உதவி இருக்கிறேன்?. எனக்கு ஒரு பிரச்சனை என்கிற போது, உதவ யாரும் துணை நிற்கவில்லை? என இப்படியெல்லாம் நம்மில் பலர் வெ வ்வேறு தருணங்களில் புலம்பியிருக்கிறோம்.

வெற்றியாளர்கள் பிரச்சனைகளைக் கண்டு பயப்படுவதில்லை. பயந்து ஒளிவதற்கு பதிலாக அவற்றை தைரியத்துடன் எதிர்கொள்கிரார்கள். இன்னும் சொல்லப்போனால், வாழ்வில் உயர,உயர பிரச்சனைகளை எதிர்கொள்வது மட்டுமே அவர்களது அன்றாட நிகழ்வாக இருக்கும். கே. பாலச்சந்தர் இயக்கிய ஒரு வீடு இரு வாசல் படத்தின் கிளைமேக்ஸ் காட்சியில், தன்னை துரத்தி வரும் நாயைப் பார்த்து பயந்து ஓடும் கதா நாயகி, சற்றே திரும்பி நாயை முறைத்துப் பார்க்க, அது வந்த வழியே ஒடி விடும். ஆம்! பிரச்சனைகளும் நாய்கள் போன்றவைதான். தைரியத்தோடு எதிர்கொண்டால் காணாமல் போகும்.

ஜப்பானியர்கள் பிரச்சனைகளை எதிர்கொண்ட கதையைப் பார்ப்போம்.



ஜப்பானியர்களுக்கு உயிருடன் உயிரோட்டத்துடனும் உள்ள ஃபிரஷ்ஷான மீன்கள் என்றால் கொள்ளைப் பிரியம். அங்கு உள்ள மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குள் நீண்ட தூரம் சென்று பல மணி நேரம் கழித்துத் திரும்புவதால்,



கரைக்கு வருகிறபோது வலையில் இருந்த மீன்களெல்லாம் வாடி வதங்கி இருக்கும். இதனால், மீன்கள் விற்ப னை குறைந்து கொண்டே வந்தது.மீளவர்கள் ஒன்று கூடி இந்தப் பிரச்சனையைத் தீர் க்க என்ன செய்வதென்று ஆலோசித்தனர். அப்போது ஒரு மீனவர் சொன்னார்:

"மீன் தொட்டிகளையே படகில் எடுத்துச் சென்று மீன்களைக் கொண்டு வரலாமே" எ ன்று. இந்த ஐடியா பிடித்துப் போகவே, மீனவர்கள் உயிருடன் மீன்களை கரைக்குக் கொண்டு வந்து விற்பனை செய்யத் தொடங்கினர். வியாபாரம் அதிகரித்தது. ஆனால், மீன்கள் உயிரு டன் இருந்தாலும், நீண்ட தூரம் பயணித்ததால் அவை சோர்வுடன் காணப்பட்டன உ யிருடன் இருந்த மீன்கள் உயிர்ப்புடன் இல்லையே என்று ஜப்பானியர்கள் வருந்தினர். மீண்டும் சபை கூடியது. இன்னொரு மீனவர்,

"மீன் தொட்டிக்குள் ஒரு சுறா மீனை விடலாமே. நாம் பிடிக்கும் நூறு மீன்களில் சுறா மீன் பத்து மீன்களைச் சாப்பிட்டாலும் பரவாயில்லை. அதன் பிடியில் இருந்து தப்ப பிற மீன்களெல்லாம் ஓடிக் கொண்டே உயிர்ப்புடன் இருக்கும் அல்லவா என்றார்.

இந்த ஐடியா மீனவர்களை கோடீஸ்வரராக்கியது. பிரச்சனைகள் உங்களை வீடு நாடி த்தான் வரும் என்று அவசியமில்லை உங்களை வளர்க்கவும் அவையே தூண்டுகோ லாக இருக்கின்றன.

அழுத்த, அழுத்த தான் கரியும் தங்கமாகும். அதுபோல், பிரச்சனைகளின் தீவிரம்தான் உங்களின் அடிமனதிற்குள் இருக்கும் திறமைகளை வெளிக்கொணரும்.





30 வருடங்களுக்கு முன்பெல்லாம் கல்யாண வீடுகளில் ஐஸ் கிரீம்களை கண்ணாடி கிளாசில் வைத்து தருவார்கள். அந்த கண்ணாடி கிளாஸ்கள் போக்குவரத்தின் போது உடைந்து நஷ்டத்தை ஏற்படுத்தியதால் கிளாசுக்கு மாற்றாக சாப்பிடுகிற பொருளையே கொள்கலனாகக் கண்டுபிடித்தால் என்ன என்ற ஐடியா ஒருவருக்குத் தோன்றியது – அதன் முடிவே, இன்றைக்கு நாம் பயன்படுத்தும் 'கோன் ஐஸ்' முதன் முதலில் பாக் கெட் திரான்சிஸ்டர் கண்டுபிடிக்கப்பட்ட போது, அது பாக்கெட்டைவிடப் பெரிதாக இருந்தது.



இதனால், அவை விற்காமல் சந்தைக்குச் சென்ற வேகத்தில் திரும்பி வந்தன. டிரான்சிஸ்டரின் அளவைக் குறைக்க முடியாது என்பதால், சட்டைப் பாக்கெட்டின் அளவைப் பெரிதாக்கினால் என்ன? என்ற ஐடியா ஒரு ஊழியருக்குத் தோன்றியது. பெரிய பாக்கெட் வைத்து சட்டை களை தைத்தால், அந்த ரெடிமேட் நிறுவனங்களுக்கு 50 ரூபாய் மானியமாகத் தரப்படும் என்று அந்நிறுவனம் அறிவித்த து. சட்டைப் பாக்கெட்கள் பெரிதாயின பாக்கெட் டிரான்சிஸ்டர்களும் விற்றுத் தீர்ந்தன.



நினைவில் கொள்ளுங்கள். பிரச்சனைகள் தோன்றுகிற போதே தீர்வும் தோன்றிவிடுகிறது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், தீர்வைத் தே டி கண்டுபிடிப்பது தான். பிரச்சனையைத் தீர்க்க இன்னொரு வழியும் இருக்கிறது, அ து பிரச்சனையைவிட நாம் 'பெரிதாக வளர்வதுதான். உதாரணத்திற்கு, சென்ற ஆண்டு நீங்கள் எதிர்கொண்ட ஒரு பிரச்சனையை இப்போது யோசித்துப் பாருங்கள். இதற்கு போயா இவ்வளவு பயந்தோம்?' என்று நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். அந்தப் பிரச்சனையை விட நீங்கள் பெரிதாக வளர்வதுதான் இந்த ஆச்சரியத்திற்குக் காரணம்.



நாம் பிரச்சனையைவிடப் பெரிதாக உயர்ந்து அங்கிருந்து பார்ப்பதால், சென்ற ஆண்டின் சம்பவங்கள் உங்களுக்கு சிறிதாகத் தெரிகின்றன. தற்போது உள்ள பிரச்சனை யையும் அடுத்த ஆண்டின் பார்வையில் இருந்து பார்க்க முடியுமா என்று யோசியுங்கள். உங்களால் இது முடியாவிட்டால் கைதேர்ந்த ஆலோசகரை உடன் வைத்துக் கொள்ளுங்கள். அவர், பறவைப் பார்வையால் வெளியிலிருந்து இவற்றைப் பார்ப்பதால், பிரச்சனைகளிலிருந்து மீள உங்களுக்கு வழிகாட்ட முடியும்.

ஆச்சீஸ் கிச்சன்

# சேலம் குகை தட்டைப்பயறு கூட்டு குழம்பு




உங்கள் வீட்டில் மதியம் சாதத்துக்கு தினமும் ஒரே மாதிரியான குழம்பு செய்து போரடித்துவிட்டதா? சற்று வித்தியாசமான ஒரு குழம்பு செய்ய நினைக்கிறீர்களா? அப்படியானால் சேலம் குகை தட்டைப்பயறு கூட்டு குழம்பு செய்து சாப்பிடுங்கள்.

இந்த கூட்டு குழம்பை சூடான சாதத்துடன் சேர்த்து சாப்பிடும் போது, அற்புதமாக இருக்கும். மேலும் இந்த குழம்பை ஒருமுறை வீட்டில் உள்ளோருக்கு செய்து கொடுத்தால்,வாரம் ஒருமுறை இந்த குழம்பை செய்ய சொல்லி கேட்பார்கள்.

உங்களுக்கு சேலம் குகை தட்டை பயறு கூட்டு குழம்பு ரெசிபியை எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? இந்த இதழில் சேலம் குகை தட்டை பயறு கூட்டு குழம்பு ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.



## தேவையான பொருட்கள்:

- புளி – 1 எலுமிச்சை அளவு

## கூட்டு பொடிக்கு...

- மல்லி – 2 டீஸ்பூன்
- உளுந்தம் பருப்பு – 1 டீஸ்பூன்
- மிளகு – 1/2 டீஸ்பூன்
- சீரகம் – 3/4 டீஸ்பூன்
- அரிசி – 1 டீஸ்பூன்
- சோம்பு – 1/2 டீஸ்பூன்
- பட்டை – சிறிய துண்டு
- கிராம்பு – 5
- வெந்தயம் – 1/4 டீஸ்பூன்
- கடலைப் பருப்பு – 1/2 டீஸ்பூன்
- வரமிளகாய் – 1
- கறிவேப்பிலை – 1 கொத்து

## வேக வைப்பதற்கு...

- தட்டைப்பயறு – 150 கிராம்
- தண்ணீர் – தேவையான அளவு
- மஞ்சள் பூசணி – 150 கிராம் (பெரிய துண்டுகளாக்கியது)
- கத்திரிக்காய் – 4 (பெரிய துண்டுகளாக்கியது)
- தக்காளி – 2 (நறுக்கியது)
- பெரிய வெங்காயம் – 1 (நறுக்கியது)
- மிளகாய் தூள் – 1 டீஸ்பூன்
- மஞ்சள் தூள் – 1/4 டீஸ்பூன்
- உப்பு – சுவைக்கேற்ப
- கொத்தமல்லி – சிறிது
- கூட்டு பொடி – 2 ஸ்பூன்



## தாளிப்பதற்கு...

- எண்ணெய் – 1 டீஸ்பூன்
- கடுகு – 1/2
- உளுத்தம் பருப்பு – 1/2
- கறிவேப்பிலை – 1 கொத்து
- பெருங்காயத் தூள் – 1/2 டீஸ்பூன்
- வெல்லம் – 1 டீஸ்பூன்

## செய்முறை:

- முதலில் புளியை நீரில் ஊற வைத்து, சாறு எடுத்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- பின்னர் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து அதில், மல்லி, உளுத்தம் பருப்பு, மிளகு, சீரகம், அரிசி, சோம்பு, பட்டை, கிராம்பு, வெந்தயம், கடலைப் பருப்பு, வரமிளகாய், கறிவேப்பிலை சேர்த்து நன்கு வறுத்து இறக்கி குளிர வைக்க வேண்டும்.
- பின்பு மிக்சர் ஜாரில் வறுத்த பொருட்களை சேர்த்து நன்கு மென்மையாக அரைத்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- பிறகு குக்கரில் தட்டைப்பயறை போட்டு, நீரில் 2 முறை கழுவி, பின் பயறு மூழ்கும் அளவு நீரை ஊற்றி, குக்கரை மூடி, 3 விசில் விட்டு இறக்க வேண்டும்.
- விசில் போனதும் குக்கரைத் திறக்க வேண்டும். அதன் பின் அதில் நறுக்கிய வெங்காயம், தக்காளி, கத்திரிக்காய், மஞ்சள் பூசணி சேர்த்து கலந்து விட வேண்டும்.
- அதன் பின் அதில் மிளகாய் தூள், மஞ்சள் தூள், சுவைக்கேற்ப உப்பு, கொத்தமல்லியை சேர்த்து கிளறி, குக்கரை மூடி 1 விசில் விட்டு இறக்க வேண்டும்.



- விசில் போனதும் குக்கரைத் திறந்து, அதில் புளிச்சாறு மற்றும் 2 ஸ்பூன் கூட்டு பொடியை சேர்த்து கலந்து, குக்கரை அடுப்பில் வைத்து, 5 நிமிடம் நன்கு கொதிக்க வைக்க வேண்டும்.
- குழம்பு நன்கு கொதித்ததும், அதை இறக்கி விட வேண்டும்.
- அடுத்து ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி சூடானதும், கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை, பெருங்காயத் தூள் சேர்த்து தாளிக்க வேண்டும்.
- பின் அதில் குழம்பை சேர்த்து கிளறி, பின் வெல்லத்தையும் சேர்த்து ஒரு கொதி விட்டு இறக்கினால், சுவையான சேலம் குகை தட்டைப்பயறு கூட்டு குழம்பு தயார்.

கட்டுரையாக்கம்:
உமாராணி சொக்கலிங்கம்.
நற்சாந்துபட்டி ஈரோடு.






இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். வாசகர்கள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram





# நகரத்தார் பழனி பாதயாத்திரை வரலாறு

**பாருலகோர் போற்றும் பழநிப் பயணமதாற்**
**சீருறவே யானைமுகன் செய்தருள்வான் – ஊருலகம்**
**எல்லாம் உவக்க இனிய நலமோங்க**
**வல்லானை நெஞ்சே வழுத்து!**



காவிரிப்பூம்பட்டினமாகிய பெருநகரத்திலிருந்து தமிழ்நாட்டின் நடுநிலைப் பகுதியான சோழ – பாண்டிய நாட்டின் எல்லைகள் சங்கமம் ஆகும் பரந்த நிலப்பரப்பில் குடியேறியதால், அப்பகுதியில் வாழ்ந்த குடியானவ நாட்டார் பெருமக்கள், அவர்களை நகரத்தில் இருந்து வந்தவர்கள் என்னும் கருத்துப்பட நகரத்தார் என அழைத்தனர்.



இத்தகு வணிக மரபினருள் செட்டிநாட்டின் வடக்கு எல்லையாகிய வெள்ளாற்றின் அருகில் அமைந்ததும் புதுக்கோட்டை ஆறாங்கல்லுக்கு இரண்டு கல் தொலைவில் உள்ளதுமான தேக்காட்டூர் முனைசந்தையில் எழுந்து அருளியிருக்கும் பனையுடை அய்யனார் அடி நிழல் சார்ந்து வாழ்ந்து வந்த நேமமான இள நலமுடையான் குப்பாபிச்சஞ்செட்டி குமரப்பன், வணிகத்தின் பொருட்டு கார்காத்த வேளாளர், மரவன் தேவன் தலைச்சுமையாக உப்புக் கடகம் ஏற்றி வணிகம் செய்வதற்காகப் பழநிப்பதி வந்து சேர்ந்தார். அங்கு தெய்வசிகாமணி பண்டாரத்து மகன் தெய்வநாயக பண்டாரத்தின் வீட்டில் உப்புக்கடகம் இறக்கி வைத்து உப்பு மாறி வாணிகம் செய்து, இலாபத்தில் மகமை எடுத்து பண்டாரத்தின் மனைவி பார்வதி அம்மாளிடம் கொடுத்துச் சோறு வடித்துப்போட்டுத் துவங்கப் பெற்ற தர்மம் தான் தொடர்ந்து வளர்ந்து தழைத்து இன்று நடத்தப்பெறும் ஐந்து நாள் மகேஸ்வரபூஜை அன்னதானமாகப் பரிணமித்திருக்கிறது.



இது துவக்கப்பட்ட காலம் தமிழகத்தில் காலூன்றிய நாயக்க மன்னர்களில் திருமலை நாயக்கர் பொறுப்பேற்பதற்கு சில ஆண்டுகள் முன்னதாகவும், வடஇந்தியாவில் ஆங்கிலேயர் கிழக்கிந்திய கம்பெனி என்ற பெயரில் கல்கத்தாவில் வந்து சேர்ந்து இராபர்ட் கிளைவ் பொறுப்பேற்றிருந்த காலமுமாகும்.

இவ்வாறு உப்பு மாறி வருங்கால், மேற்படி குப்பாபிச்சஞ்செட்டி குமரப்பனுடன் கலாமடம் (இவ்வூர் கிளாமடம் என்ற பெயருடன் நெற்குப்பை, மகிபாலன்பட்டி, கண்டவராயன்பட்டி, தெக்கூர் என்னும் நகரத்தார் பெருமக்கள் வாழும் ஊர்களின் இடையில் மையமாக ஒரு சிற்றூராக இருந்து வருகிறது.



குரு தேசிகர் ஈசானிய சிவாச்சாரியரும் பழநி வந்து பண்டாரத்தின் வீட்டில் தங்கி சுவாமி தரிசனம் செய்து திரும்புங்கால், குமரப்பனையும் பிற நகரத்தார்களையும் அழைத்து பழநிக்குக் காவடி எடுக்கச் சொன்னார். அவர்களில் குமரப்பன் மட்டும் குருதேசிகர் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு ஒப்புதல் அளிக்க, பழநியிலிருந்து தெய்வநாயக பண்டாரத்தையும் கலாமடத்துக்கு வரவழைத்து, கலாமடம் மடாலயத்திலேயே குப்பாபிச்சஞ்செட்டி குமரப்பனுக்குக் காவடி கட்டிக் கொடுத்து பழநிக்கு கூட்டி வந்தார்கள். குமரப்பன் மனைவி சிட்டாள் ஆச்சியும் கூடவே வந்துள்ளார். அன்று ஈசானிய குருதேசிகர் அருளாசியுடன் குமரப்பன் தோளில் ஏற்றி வைக்கப்பட்ட சர்க்கரைக் காவடியே இன்றளவும் தொடர்ந்து நெற்குப்பையிலிருந்து கட்டளை முத்திரையாகக் குமரப்பன் பரம்பரையினரால் எடுத்து வரப்பெறுகிறது. இந்த முத்திரைக் காவடி கி.பி. 1601 முதல் இடைவிடாது தொடர்ந்து நெற்குப்பையிலிருந்து எடுத்து வரப்பெறுகிறது. இந்தக் காவடியே கட்டளை முத்திரையாகத் தொடர்ந்து வருகிறது.



காவடி எடுத்து வந்ததில் குமரப்பனுக்கு அனுகூலமான பலன்கள் கிடைத்ததால், பிற நகரத்தார்களும் முன்வந்து காவடி எடுத்து வந்ததாக பழநிக்கோயில் நடப்பு அட்டவணையும், கலியுக ஆண்டு 4700 (கி.பி. 1608) விக்குருதி வருடம் தை மாதம் பத்தாம் தேதி எழுதப்பட்ட முதலாவது ஏழு நகரத்தார் தர்ம சாசனமும் கூறுகின்றன.



நகரத்தார் கூடும் இடங்களிலும், கோவில்களிலும் ஒக்கூருடையாருக்கு முதல் மரியாதை என்பது அந்நாள் தொட்டு இருந்துவரும் மரபாகும். அந்த முதல் மரியாதையை ஈசான குருவின் உத்தரவுப்படி நேமமான இள நலமுடையான் குப்பாபிச்சஞ்செட்டி குமரப்பனுக்குத் தருவதென, ஒக்கூருடையார் உட்பட ஏழுகோயில் நகரத்தார் அனைவரும் ஒப்புக்கொண்டு மேற்படி தரும சாசனத்தில் எழுதி வைத்துள்ளனர். அதன்படி பழநிப்பட்டிணத்தில் ஆதீனகுரு தேசிகர்களுக்கு அடுத்ததாக பழநிப்பண்டாரத்தையாவுக்கும், அதன்பின் நகரத்தார்களில் முதல் மரியாதையாக மேற்படிகுப் பாபிச்சஞ்செட்டி குமரப்பனுக்கும் தீர்த்தம் திருநீறு காளஞ்சி வழங்குவதெனவும் நகரத்தார்கள் முடிவு செய்து, மேற்படி சாசனத்தை ஒக்கூருடையாரைக் கொண்டே எழுதி வைத்திருக்கிறார்கள்.

குமரப்பனின் பழநிப்பயணத்தில், அவர்தம் அருளாசியினால் அனுகூலம் பெற்ற சம்மப்பட்டி (சமுத்திரப்பட்டி) நத்தமலிங்க நாயக்கர், பழநி ஆண்டவர் கட்டளையின் பெயரில் பெரிய இரும்பு வேலாயுதமும், சிறிய வேலாயுதம் ஒன்றும் செய்து கொடுத்தார். பெரிய வேலாயுதத்தை, பழநிப் பட்டணத்தில் பார்வதி அம்மாள் வீட்டில் நிறுத்திப் பூஜையிடவும், சிறிய வேலாயுதத்தைக் குமரப்பன் தன் மடிச்சீலைப்பையில் வைத்திருக்கவும் உத்தரவானது.

குமரப்பன் மடிச்சீலைப்பையில் வைத்திருந்த சிறிய வேலாயுதமும், மேற்படியார் தனதில் செய்து வைத்த இன்னொரு வேலாயுதமும் நெற்குப்பையில் பழநிக்கோவில் வீட்டில் வைத்துப்பூஜை செய்யப் பெற்று வருகிறது. மேற்படி 2 வேல்களும் ஆண்டுதோறும் தைப்பூசத்திற்கு நெற்குப்பை நகரக்கட்டளைக் காவடி வரும்பொழுது, குமரப்பன் மக்களில் வயதில் மூத்தவரான பூசாரி (செட்டி)யாரால் திருநீற்றுபையில் வைத்துப் பழநிக்கு எடுத்துவரப்பெற்று அன்னதான மடத்தில் வைக்கப் பெறுகிறது.


நகரக்கட்டளைக்காவடியும், குமரப்பனின் மக்களில் மூத்த வாரிசு வழிவந்தோரில் பூசாரி செட்டியார் வகை தவிர மற்ற இரு வகையினரால் முறை வைத்து, இன்றளவும் தொடர்ந்து எடுத்து வரப்பெறுகிறது. மூத்த வாரிசுக்குள் மூன்று ஐயாக்கள் வழியிலும் யார் ஒருவர் வயதில் முதிர்ந்தவராக இருக்கிறாரோ அவரே விபூதிப்பையும், வேலும் எடுத்து வரவேண்டுமென்பதும் இன்றைய நடைமுறை நியதி ஆகும். இளையவாரிசு வழிவந்தோர் இவையனைத்தையும் கொண்டு செலுத்தி இன்றளவும் நடைமுறை மேற்பார்வை பொறுப்பேற்று வருகிறார்கள். நெற்குப்பையிலிருந்து வரும் வேலாயுதங்கள் மட்டும் நகரத்தாரால் (பூசாரிச்செட்டியாரால்) எடுத்து வரப்பெறுகிறதென்பது குறிப்பிடத்தக்கது. பிற வேல்களையெல்லாம் பண்டாரங்கள் மூலமாகத்தான் எடுத்து வருகிறார்கள்.





கலியுகாதி ஆண்டு 4868 (கி.பி. 1766) சர்வசித்து வருடத்தில் காவடி எடுத்து வந்த கண்டனூர் இரணிக்கோயில் பெ. குட்டையன் செட்டியார் பழநி ஆண்டவர் அருள் தங்கி யாவருக்கும் நினைத்த காரியம் சொல்லி நல்லாசி வழங்கி வருகையில், பழநி விஜயகிரி வேலாயுதத்துரையும், மறவர் மண்டலாதிபர்கள் ஆன மருதுபாண்டியர் என்னும் சின்னமருது, பெரியமருது மன்னர்களும் நேரில் கண்டு அனுகூலம் பெற்று, மனம் மகிழ்ந்து மேற்படி குட்டையன் செட்டியாருக்கு நகர மரியாதைகள் செய்ய வேண்டுமென்று நேமமான இளநலமுடையான் குமரப்பனை

அழைத்துக் கேட்டுக்கொண்டதன் பேரில், கலாமடம், திருப்புனல்வாசல் (பாதரக்குடி) குருதேசிகர்களுக்கும் பழநிப் பண்டாரத்தய்யாவுக்கும், குமரப்பனுக்கு அடுத்ததாக கண்டனூர் குட்டையன் செட்டியாருக்குநகரத்தார்களில் இரண்டாவது மரியாதை செய்வது என்று, தொண்ணூற்றாறூர் ஏழுகோவில் இருபத்திரெண்டு கோத்திரம் நாட்டுக்கோட்டை நகரத்தார் தர்மசாசனம் எழுதி வைத்தார்கள்.



பழநி ஆண்டவர் அருளால் நலம்பெற்ற நகரத்தார்கள் கூடக்கூடப் பழநிப்பட்டணம் பார்வதி அம்மாள் மடத்தில் ஏற்படுத்திய அன்னதான தர்மத்திற்கு இடநெருக்கடி உண்டானதால், அதற்குப் பக்கத்து மனையான மோளையத்தேவன் மனையையும் நகரப்பொதுவில் மகமைப்பணத்தில் வாங்கி, பார்வதி அம்மாள் மனையுடன் சேர்த்து விரிவுபடுத்தி கல் திருப்பணி செய்தனர். அப்பொழுது கல்திருப்பணியை ஏற்று இருந்த வைரவன் கோயில் (காரைக்குடி) வேலப்பசெட்டி வைரவனுக்கு வானத்துக்கு மொங்கான் போட பழநி ஆண்டவர் கனவில் வந்து கூறி உதவியும் செய்து அருளியதால், அவருக்கு மூன்றாவது மரியாதை நகரத்தார் செய்வதென்று,கலியுகம் 4889 (கி.பி. 1788) பிலவங்க வருஷம் சித்திரை மாதம் 15–ஆம் தேதி எழுதப்பட்ட ஏழு நகரத்தார் தர்ம சாசனப்பட்டயம் கூறுகிறது.



புதுக்கோட்டை மண்டலத்தைச் சேர்ந்த மேலைச்சிவப்பட்டி பிள்ளையார் கோயில் வகுப்பு முத்தப்பசெட்டியார், பழநியப்பர் அருளுடன் காவடி செலுத்தி வந்து இறக்கி வைத்திருக்கையில், புதுக்கோட்டைத் தொண்டைமான்மன்னர் அப்பகுதிக்கு வேட்டைக்கு வந்தவர், முத்தப்ப செட்டியாரை நேரில் கண்டு அருள்பெற்று அவருக்கு பரிசுகள் நல்கி, அவர் விரும்பிய வண்ணம் தாம்பூர வேல் ஒன்று செய்து கொடுத்து, நேமம் கோயில் பழநியப்பனை (குப்பாபிச்சஞ்செட்டி குமரப்பன் வாரிசு அரண்மனைக்கு அழைத்து, பழநி நகரத்தார் ஐந்து நாள் மகேஸ்வர பூஜையில் அன்னதான மடத்தில் மேற்படி முத்தப்பன் வசமிருக்கும் தாம்பூர வேலையும் வைக்கக் கட்டளையிட்டார். அவ்வாறு செய்வதாக கலியுகம் 4906 (கி.பி.1805) குரோதிவருடம் தை மாதம் இருபத்திரெண்டாம் தேதி ஏழுகோவில் நகரத்தார்கள் தர்ம சாசனம் எழுதினர். குன்றக்குடி வேலாயுதமும், தேவகோட்டை இரத்தின வேலாயுதமும் பழநித் தைப்பூசத்திற்கு எடுத்து வருவதாக மேற்படி சாசனம் கூறுகிறது.



மேற்படி நகரத்தார் தர்ம சாசனப்பட்டயங்கள் மற்றும் நடப்பு அட்டவணைகளின்படி, பழநி அன்னதான மடத்துமனை தேசிகர் (பண்டாரத்தய்யாக்) களுடையதாகவும் தருமம் நகரத்தார்களுடையதாகவும் இருந்துவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டபடி, குருதேசிகர் உத்தரவு போல் இன்றும் இருந்து வருகின்றன.

அப்பட்டயத்தில் காணப்படும் நடைமுறை மரியாதைகளில் சிற்சில மாறுதல்கள் காலப்போக்கில் இடம் பெற்றுவிட்டனவாயினும், ஆண்டவன் திருப்பணி இன்றளவும் தொடர்ந்து நடந்து வருகிறது. முன்னோர்கள் கொடுத்த வாக்கின்படி, உலகம் உள்ளளவும் யுகம் யுகாந்திரமாய் என்றென்றும் தொடர்ந்து வரும்.

## நகரத்தார் பழநியப்பயண வரலாற்றில் சில மைல்கற்கள்:



- கி.பி. 1590
  குப்பாபிச்சஞ்செட்டி குமரப்பன் உப்பு வணிகத்தின் பொருட்டுப் பழநிப் பயணம் மேற்கொண்டு அன்னதானமும் செய்த ஆண்டு
- கி.பி. 1600
  கலாமடம் ஈசானிய சிவாசாரியார் வழி நடத்தி பழநிப்பயணம் மேற்கொண்டது
- கி.பி. 1601
  குப்பாபிச்சஞ்செட்டி குமரப்பன் முதல் முதல் காவடி எடுத்தது – கட்டளை முத்திரை துவக்கம்

- கி.பி. 1601
  மேற்படியார் மனைவி சிட்டாள் ஆச்சியும் மற்ற நகரத்தார்களும் பழநிக்குக் கூட வந்தது
- கி.பி. 1602
  குமரப்பனுடன் பிற நகரத்தார்கள் காவடி எடுத்து வந்தது
- கி.பி.1605
  ஈசானிய சிவாச்சாரியார் முன்னிலையில் தேசிகர் வீட்டை அன்னதான மடமாக நிர்ணையித்தது
- கி.பி. 1608
  நகரத்தார், தேசிகருக்கு முதலாவது பட்டயம் எழுதிக் கொடுத்து – குமரப்பருக்கு நகரத்தார்களில் முதல் மரியாதை வழங்கியது (கலி 4700)
- கி.பி. 1766
  கண்டனூர் பெ. குட்டையன் செட்டியார் அருளாடி வந்ததும் மேற்படி குட்டையன் செட்டியார்க்கு 2வது மரியாதை நிர்ணயம் செய்து இரண்டாவது பட்டயம் எழுதியதும் (கலி 4868)
- கி.பி. 1788
  காரைக்குடி வயிரவன் கோயில் வேலப்ப செட்டி வயிரவன் பொறுப்பு ஏற்று அன்னதான மடத்தில் கல்திருப்பணி செய்தது, மேற்படியார்க்கு 3வது மரியாதை வழங்கி பட்டயம் எழுதியது (கலி 4880)
- கி.பி. 1805
  மேலைச்சிவபுரி பிள்ளையார் கோயில் முத்தப்ப செட்டியார் பழநிக்கு தாம்பூரவேல் எடுத்து வந்தது (கலி 4906)

(நெற்குப்பை குப்பாபிச்சஞ்செட்டி குமரப்பன் (பரம்பரையினர்) பழநிப் பயணம் என்னும் சிறப்பு வெளியீட்டிலிருந்து சென்னை அம்பத்தூர் நகரத்தார் நல அறக்கட்டளை வெளியீடான " நன்மக்கள் நகரத்தார் " நூலுக்காக தொகுத்தளித்தவர் நெற்குப்பை V .சுப்ரமணியன் Bcom.,BL.,F.I.I.I. )

நன்றி : நகரத்தார் நல அறக்கட்டளை, அம்பத்தூர், சென்னை.



# NAGARATHAAR KAPITAL

Webinar Course.
Stock Market Course (Beginners).
Basics, Fundamentals, Technical (Introduction)
Stock Market Course (Advanced).
Technical, Strategies

Why One Wealth Course?
Learn from Qualified and Experienced Expert Panelists
Your search for in-depth Knowledge ends here.
You will become a Professional trader and Informed Investor
Got Learn about Different Market

Who can join?

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

Our "Young Generation" can learn and start doing analysis to identify potential stocks @ Correct Entry / Correct Exit to win the Trade and by Investing in turn around stocks to create wealth by their own in reasonable period of time.

Webinar Dates: Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
This Month Class will be On January 28th, 2026

Webinar Timings: India Time: in 17:30Hrs-18.30Hrs / 21.00- 22.00Hrs In-Week days & 17.00Hrs-18.00Hrs / 20.00-21.00Hrs Week Ends.

# For further Details Contact: +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை ) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு நிறுவனம் குறித்த பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம்.

**இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.**

காா்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) நகரத்தார் கேப்பிட்டல் – சென்னை

## KWALITY PHARMACEUTICALS LIMITED (539997/KPL)

Kwality Pharmaceuticals Limited

## குவாலிட்டி ஃபார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட்.

மே 04, 1983 அன்று பஞ்சாப், ஹரியானா மற்றும் சண்டிகரில் உள்ள நிறுவனப் பதிவாளரால் சான்றிதழின் மூலம் பதிவுசெய்யப்பட்டு நிறுவப்பட்ட நிறுவனம்.

இந்த நிறுவனம் பரந்த அளவிலான finished pharmaceutical formulations உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளது. 6th Mile Stone, Village Nag Kalan, Majitha Road, Amritsar 143006, Punjab என்ற இடத்தில் அமைந்துள்ள அதிநவீன உற்பத்தி அலகுகள் மூலம்அதன் உற்பத்தியை மேற்கொள்கிறது. இது அதன் பதிவுசெய்யப்பட்ட/நிர்வாக அலுவலகம் மற்றும் தொழில்துறை பகுதி, 1-A Industrial Area, Raja ka bagh, Jassur, Himachal Pradesh. அமைந்துள்ள மற்றொரு உற்பத்தி வசதியாகும்.

நிறுவனம் அதன் இரண்டு உற்பத்தி வசதிகளும் நன்கு பொருத்தப்பட்டு மற்றும் இந்த உற்பத்தி வசதிகளில் பல பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. நிறுவப்பட்டதிலிருந்து, உயர்தர மற்றும் சரியான நேரத்தில் வழங்குவதற்கான அதன் உறுதிப்பாட்டின் அடிப்படையில் நிறுவனம் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையில் முன்னேறி வருகிறது. அதன் வாடிக்கையாளர்களுக்கு நேர்மை / ஒருங்கினைகப்பட்டு / விசுவாசத்தைப் பேணுகையில், தனித்துவமானா மற்றும் தரமான தயாரிப்புகளை வழங்குகிறது.

குவாலிட்டி பார்மா ANVISA மற்றும் EU GMP சான்றளிக்கப்பட்ட உற்பத்தியாளர் ஆகும், இதில் அனைத்து மருந்து தயாரிப்புகளின் முக்கிய உயிரியல் இடம் உட்பட அனைத்து அளவு வடிவங்களிலும் சிக்கலான மூலக்கூறுகள் அடங்கும்.

இந்த நிறுவனம் ஜெனரிக்ஸ், செபலோஸ்போரின், பீட்டா-லாக்டாம், புற்றுநோயியல் மற்றும் உயிரியல் உள்ளிட்ட 25+ சிகிச்சைப் பகுதிகளில் 3000+ மருந்துகளின் ஃபார்முலேஷன் போர்ட்ஃ போலியோவைக் கொண்டுள்ளது.



குவாலிட்டி பார்மா மருந்து இடைநிலைகள், ரசாயனங்கள், சாறுகள், ஆல்கலாய்டுகள் மற்றும் பிற மருந்துப் பொருட்களை தயாரித்து விற்பனை செய்கிறது.

**நிறுவனம் பல்வேறு வகையான தயாரிப்புகளில் நிபுணத்துவம் பெற்றது, பின்வருவன அவற்றில் அடங்கும்**

- Small Volume Parenterals (Liquid / Lyophilized)
- Sterile Powder for Injections
- Pre-filled Syringes
- Dental Cartridges
- Liquid Orals (Bottles & Pouches)
- Powder for Oral Suspension
- Tablets
- Capsules
- Ointments / Creams
- Ophthalmic / Otic-Nasal Preparations
- Suppositories

**பிற முக்கிய தயாரிப்புகள் மற்றும் சேவைகள்**

- Pharmaceuticals formulations in liquid orals, dry syrups, tablets, capsules, sterile powder for injections, and small-volume injectables
- Drug intermediates, chemicals, extracts, and alkaloids
- Biologics and niche pharmaceutical products

ஒவ்வொரு தயாரிப்பு வகையும் பஞ்சாப் (இந்தியா) அமிர்தசரஸ் மற்றும் இமாச்சலப் பிரதேசம் (இந்தியா) ஜஸ்ரூரில் அமைந்துள்ள அவர்களின் வசதிகளில் ஒரு பிரத்யேக அலகில் தயாரிக்கப்படுகின்றன.

அவர்களின் விரிவான தயாரிப்பு தொகுப்பு பல்வேறு சிகிச்சை பிரிவுகளை உள்ளடக்கியது, அவற்றுள்:



Beta-Lactams, General Injectables, General Lines, Cephalosporins, Cytotoxics (Oncology) & Biologicals with Hormonal (Upcoming).

குவாலிட்டி பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட் தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் உலகளாவிய தயாரிப்பு போர்ட்ஃபோலியோவில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. அவர்களின் தயாரிப்புகள் உலகளவில் 70 க்கும் மேற்பட்ட நாடுகளை (RU/CIS, SOUTH & CENTRAL AMERICA, AFRICA, EUROPE, ASIA, MIDDLE EAST) சென்றடைகின்றன. கடந்த மூன்று நிதியாண்டுகளில், நிறுவனம் சர்வதேச சந்தைகளில் 400+ க்கும் மேற்பட்ட தயாரிப்புகளை வெற்றிகரமாக பதிவு செய்துள்ளது. தற்போது பல்வேறு மதிப்பாய்வு மற்றும் ஒப்புதலின் கீழ் உள்ள கூடுதலாக 200+ தயாரிப்புகளுடன் இந்த உந்துதல் தொடர்கிறது.

குவாலிட்டி பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட், 100க்கும் மேற்பட்ட சந்தை கூட்டாளர்களுடன் இணைந்து தனது உலகளாவிய தடத்தை மூலோபாய ரீதியாக விரிவுபடுத்துகிறது. உற்பத்தி, வழங்கல் மற்றும் கூட்டாளியின் வசதிகளுக்கு தொழில்நுட்ப பரிமாற்றங்கள் போன்ற நெகிழ்வான வணிக மாதிரிகள் மூலம் குவாலிட்டி பார்மாசூட்டி கல்ஸ்யின் உயர்தர தயாரிப்புகளை உலகெங்கிலும் உள்ள நுகர்வோருக்கு கொண்டு செல்வதில் இந்த கூட்டாண்மைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**அடிப்படைக் கண்ணோட்டம்:–**

நிறுவனம் 47.28 ஒருங்கிணைந்த EPS (2025–09 அன்று முடிவடைந்த பன்னிரண்டு மாதங்கள் பின்தொடர்கிறது), தொழில்துறை PE 36.34 உடன் ஒப்பிடும்போது 21.19 ஒருங்கிணைந்த PE விகிதம் கொண்டது. முக மதிப்பு 10.

நிறுவனம் ஈக்விட்டி (ROE) மீதான நல்ல வருமானப் பதிவைக் கொண்டுள்ளது: 3 ஆண்டுகள் ROE 15.5%



நிறுவனத்தின் சராசரி விற்பனை வளர்ச்சி கடந்த 10 ஆண்டுகளில் 22.4% ஆகும்

சமீபத்திய கிடைக்கக்கூடிய தரவுகளின்படி, பிரமோட்டர்கள் 54.83% வைத்திருக்கிறார்கள்.

## நிறுவன அடிப்படைகள்:–

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>**23.24** | EPS - TTM (₹)<br>**47.28** |
| MCap (₹ Cr.)<br>**1,140.34** | Sectoral MCap Rank<br>**83** |
| PB Ratio (x)<br>**4.50** | Div Yield (%)<br>**0.03** |
| Face Value (₹)<br>**10.00** | Beta<br>- |
| VWAP (₹)<br>**1,126.15** | 52W H/L (₹)<br>**1,235.00 / 596.05** |

**Kwality Pharmaceutic Share Price Insights**

- Beating 3 Yr Revenue CAGR +
- Employee & Interest Expense +
- Kwality Pharmaceutic Share Price Update +

**Kwality Pharmaceutic Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | ↓-4.71% |
| 1 Week | ↓-0.08% |
| 1 Month | ↑13.84% |
| 3 Months | ↑26.08% |
| 1 Year | ↑13.25% |
| 3 Years | ↑195.83% |
| 5 Years | ↑1697.22% |

## Kwality Pharmaceutic Share Price Update

Kwality Pharmaceuticals Ltd. share price moved down by -4.71% from its previous close of Rs 1,153.35. Kwality Pharmaceuticals Ltd. stock's last traded price is 1,099.00.

## நிறுவன நிதி நிலை:–


Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios CONSOLIDATED

**INSIGHTS**

**Beating 3 Yr Revenue CAGR**
Company's annual revenue growth of 20.43% outperformed its 3 year CAGR of -6.74%. (Source: Consolidated Financials)

**Employee & Interest Expense**
Company has spent 2.67% of its operating revenues towards interest expenses and 11.83% towards employee cost in the year ending Mar 31, 2025. (Source: Consolidated Financials)

| QUARTERLY \| ANNUAL | SEP 2025 | JUN 2025 | MAR 2025 | DEC 2024 | SEP 2024 |
|---|---|---|---|---|---|
| Total Income | 111.95 | 111.85 | 116.44 | 85.06 | 90.26 |
| Total Income Growth (%) | ↑10.08 | ↓-3.94 | ↑36.89 | ↓-5.76 | ↑12.32 |
| Total Expenses | 90.66 | 92.07 | 94.87 | 71.47 | 75.00 |
| Total Expenses Growth (%) | ↓-1.53 | ↓-2.96 | ↑32.75 | ↓-4.71 | ↑12.34 |
| EBIT | 21.29 | 19.79 | 21.57 | 13.59 | 15.26 |
| EBIT Growth (%) | ↑7.60 | ↓-8.25 | ↑58.65 | ↓-10.92 | ↑12.24 |
| Profit after Tax (PAT) | 14.12 | 11.93 | 14.49 | 8.53 | 8.47 |
| PAT Growth (%) | ↑18.37 | ↓-17.69 | ↑69.86 | ↑0.70 | ↑1.36 |
| EBIT Margin (%) | 19.02 | 17.69 | 18.52 | 15.98 | 16.91 |
| Net Profit Margin (%) | 12.61 | 10.66 | 12.44 | 10.03 | 9.38 |
| Basic EPS (₹) | 13.60 | 11.49 | 13.95 | 8.21 | [illegible] |



## Beating 3 Yr Revenue CAGR

The company's annual revenue growth of 20.43% outperformed its 3 year CAGR of -6.74%. (Source: Consolidated Financials)

## Employee & Interest Expense

The company has spent 2.67% of its operating revenues towards interest expenses and 11.83% towards employee cost in the year ending Mar 31, 2025. (Source: Consolidated Financials)

Income (P&L) | **Balance Sheet** | Cash Flow | Ratios — CONSOLIDATED

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 447.27 | 394.21 | 353.63 | 340.59 | 166.26 |
| Total Assets Growth (%) | ↑13.46 | ↑11.47 | ↑3.83 | ↑104.85 | ↑25.30 |
| Total Liabilities | 184.88 | 171.63 | 154.56 | 160.80 | 106.41 |
| Total Liabilities Growth (%) | ↑7.72 | ↑11.04 | ↓-3.88 | ↑51.11 | ↑21.29 |
| Total Equity | 262.40 | 222.58 | 199.07 | 179.79 | 59.85 |
| Total Equity Growth (%) | ↑17.89 | ↑11.81 | ↑10.72 | ↑200.40 | ↑33.11 |
| Current Ratio (x) | 1.67 | 1.60 | 1.65 | 1.75 | 1.35 |
| Total Debt to Equity (x) | 0.43 | 0.44 | 0.45 | 0.24 | 0.58 |
| Contingent Liabilities | 36.98 | 0.35 | 0.51 | 0.05 | 0.59 |

Income (P&L) | Balance Sheet | **Cash Flow** | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**Increase in Cash from Investing**
Company has used Rs 28.52 cr for investing activities which is an YoY increase of 8.03%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 52.72 | 42.98 | 41.38 | 64.46 | 26.71 |
| Net Cash used in Investing Activities | -28.52 | -26.40 | -48.44 | -62.98 | -23.20 |
| Net Cash flow from Financing Activities | -14.44 | -17.40 | 0.99 | 5.66 | 0.77 |
| Net Cash Flow | 9.76 | -0.81 | -6.07 | 7.14 | 4.27 |
| Closing Cash & Cash Equivalent | 12.02 | 2.26 | 3.07 | 12.95 | 5.81 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↑432.36 | ↓-26.44 | ↓-76.30 | ↑122.97 | ↑277.59 |
| Total Debt/ CFO (x) | 2.13 | 2.28 | 2.18 | 0.67 | 1.30 |

## Increase in Cash from Investing

The company has used Rs 28.52 cr for investing activities which is an YoY increase of 8.03%. (Source: Consolidated Financials)



## தொழில்நுட்ப விளக்கப்படம்:–

### Technicals

Buy / Sell Signals | Price Analysis | Pivot Levels & ATR | Chart





## சக நிறுவன ஒப்பீடு:–

### Peer Comparison

Kwality Pharmaceutic Stock Performance | Ratio Performance | CHART | TABLE

Kwality Pharmaceutic · Lincoln Pharma · Fermenta Biotech · Granules India Ltd. · Biocon Ltd.

1D 1W 1M 3M 6M 1Y 5Y



| NAME | 1D | 1W | 1M | 3M | 1Y | 3Y | 5Y |
|---|---|---|---|---|---|---|---|
| Kwality Pharmaceutic Stock Performance | -4.71 | ↓-0.08 | ↑13.84 | ↑26.08 | ↑13.25 | ↑195.83 | ↑1697.22 |
| Lincoln Pharma Stock Performance | -0.27 | ↓-0.84 | ↑2.32 | ↓-8.05 | ↓-39.68 | ↑39.24 | ↑104.63 |
| Fermenta Biotech Stock Performance | -2.54 | ↓-7.63 | ↓-6.08 | ↑6.43 | ↓-20.62 | ↑83.81 | ↑5.13 |
| Granules India Stock Performance | -0.38 | ↓-0.84 | ↑4.44 | ↑5.94 | ↑1.03 | ↑88.59 | ↑65.98 |
| Biocon Stock Performance | -2.31 | ↓-5.20 | ↓-4.09 | ↑5.09 | ↑2.83 | ↑48.28 | ↓-21.48 |


## RATIO PERFORMANCE

| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROCE % | ROA % | REV CAGR [3YR] | OPM | NPM | BASIC EPS | CURRENT RATIO |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Kwality Pharmaceutic | 23.24 | 4.35 | 15.13 | 23.04 | 8.90 | -6.74 | 17.29 | 10.75 | 38.36 | 1.67 |
| Lincoln Pharma | 12.17 | 1.45 | 12.25 | 16.07 | 10.33 | 10.12 | 17.82 | 13.21 | 41.11 | 4.71 |
| Fermenta Biotech | 8.40 | 2.62 | 21.19 | 24.19 | 12.50 | 5.72 | 20.74 | 16.27 | 26.35 | 1.58 |
| Granules India | 28.39 | 3.92 | 13.49 | 17.24 | 8.02 | 5.86 | 16.34 | 11.19 | 20.69 | 1.56 |
| Biocon | 115.21 | 2.02 | 4.68 | 6.04 | 1.72 | 24.90 | 17.60 | 9.36 | 8.46 | 1.14 |

## பங்குதாரர் பங்கஅமைப்பு:–

**Shareholding Pattern**

QOQ Change | Total Shareholdings





*Showing Kwality Pharmaceutic Shareholding as on Sep 2025*

| CATEGORY | SEP 2025 | JUN 2025 | MAR 2025 | DEC 2024 |
|---|---|---|---|---|
| Promoters | 54.83 | 54.83 | 54.83 | 54.83 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| FII | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| DII | 0.33 | 0.33 | 0.32 | 0.03 |
| Mutual Funds | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| Others | 44.84 | 44.84 | 44.85 | 45.14 |

▲ BACK TO TOP

QOQ Change | Total Shareholdings




*Showing Shareholding as on Sep 2025*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 56,89,022 | 54.83 % | 0.00 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| DII | 34,495 | 0.33 % | 0.00 |
| MF | 173 | 0.00 % | - |
| Others | 46,52,681 | 44.84 % | 0.00 |

## ஆய்வாளரின் தனிப்பட்ட பார்வையில்:–

குவாலிட்டி ஃபார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட். நன்கு நிறுவப்பட்ட பொதுவான வணிகத்தைக் கொண்ட ஒரு முன்னணி மருந்து நிறுவனம். தனிப்பட்ட ஆய்வின்படி, எனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் நடுத்தர கால (9 மாதங்கள் முதல் 18 மாதங்கள் வரை) முதல் நீண்ட கால (18 முதல் 36 மாதங்கள் வரை வரை) முதலீட்டிற்கு ஏற்றதாகத் தெரிகிறது. நடுத்தர காலத்தில் 1450+ ஐக் காணலாம். எனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் நீண்ட காலத்திற்கு 1800+ ஐ எதிர்பார்க்கலாம்.

## இந்த மாதம் குறுகிய கால பங்கு பரிந்துரைகள்.

க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

1, **Yatharth Hospital & Trauma Cre Srvcs Ltd...**
**Entry 600₹ to 610₹. Add more on down around 500₹.**
**Target 700₹, 800₹ and 900₹+++.**

2, **GRM Overseas Ltd...**
**Entry 160₹ to 165₹. Add more on down around 120₹.**
**Target 200₹, 220₹ and 240₹+++.**



3, Steel Authority of India Ltd...
Entry 140₹ to 145₹. Add more on down around 110₹.
Target 180₹, 200₹ and 220₹+++.

4, Fiem Industries Ltd...
Entry 2100₹ to 2150₹. Add more on down around 1500₹.
Target 2400₹, 2700₹ and 3000₹+++.

5, AGI Greenpac Ltd...
Entry 680₹ to 700₹. Add more on down 550₹.
Target 800₹, 900₹ and 1000₹+++.

6, KRN Heat Exchanger and Refrigeration Ltd...
Entry 620₹ to 650₹. Add more on down around 500₹.
Target 800₹, 900₹ and 1000₹+++.

7, Knowledge Marine & Engineering Works Ltd...
Entry 1600₹ to 1650₹. Add more on down around 1200₹.
Target 1800₹, 2000₹ and 2200₹+++.

8, Artemis Medicare Services Ltd...
Entry 240₹ to 245₹. Add more on down around 200₹.
Target 280₹, 300₹ and 320₹+++.

9, Yatra Online Ltd...
Entry 150₹ to 160₹. Add more on down around 110₹.
Target 180₹, 200₹ and 220₹+++.

10, Epack Durable Ltd...
Entry 240₹ to 250₹. Add more on down around 180₹.
Target 280₹, 320₹ and 360₹+++.

## பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் பற்றிய தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது



# Carbon capture and storage (CCS) Carbon Credits.



– கார்த்திக் முத்தப்பன்
நகரத்தார் கேப்பிட்டல்



சென்ற இதழ் தொடர்ச்சி :

**CCS (Carbon Capture and Storage),**
**CCU (Carbon Capture and Utilisation) =**
**CCUS (Carbon Capture Utilisation and Storage)**

**மறுபயன்பாடு, குறைத்தல், மறுசுழற்சி செய்தல்**





எந்த எந்த தொழில்கள் Carbon Capture Utilisation and Storage(CCUS) ஐப் பயன்படுத்த முடியும்.







CCUS–ஐ ஏற்கனவே உள்ள மின் மற்றும் தொழில்துறை ஆலைகளில் மறுசீரமைக்க முடியும், இதனால் அவற்றின் தொடர்ச்சியான செயல்பாடு சாத்தியமாகும். இது குறைக்க கடினமாக உள்ள துறைகளில், குறிப்பாக சிமென்ட், எஃகு அல்லது ரசாயனங்கள் போன்ற கனரக தொழில்களில் உமிழ்வைச் சமாளிக்க முடியும்.

## மின் உற்பத்தி மற்றும் தொழில்துறையிலிருந்து வெளியேற்றத்தைக் குறைத்தல்





CCUS–ஐ புதிய கட்டிடங்களில் சேர்க்கலாம் அல்லது ஏற்கனவே உள்ள புதைபடிவ எரிபொருள் சார்ந்த மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் தொழில்துறை வசதிகளில் மறுசீரமைக்கலாம், இல்லையெனில் வளிமண்டலத்தில் வெளியிடப்படும் $CO_2$ உமிழ்வைப் பிடிக்கலாம். சிமென்ட் மற்றும் எஃகு உற்பத்தி போன்ற உமிழ்வைக் குறைக்க கடினமாக இருக்கும் துறைகளுக்கு இது மிகவும் முக்கியமானது.

சுத்தமான ஹைட்ரஜன் உற்பத்தியை செயல்படுத்துதல்.





ஹைட்ரஜன் என்பது நீல ஹைட்ரஜன் எனப்படும் CCUS உடன் புதைபடிவ எரிபொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய ஒரு சுத்தமான எரிபொருளாகும். இந்த செயல்முறை ஹைட்ரஜன் உற்பத்தியின் போது உற்பத்தி செய்யப்படும் $CO_2$ ஐப் பிடிக்கிறது, இது பச்சை ஹைட்ரஜனுக்கு போதுமான வளங்கள் உருவாக்கப்படும் வரை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பச்சை ஹைட்ரஜனுக்கு குறைந்த கார்பன் மாற்றாக அமைகிறது.

CCS (BECCS) நேரடி காற்று பிடிப்பு உடன் உயிரி ஆற்றல்.



CCUS தொழில்நுட்பங்கள் நேரடி காற்று பிடிப்பு (DAC) அல்லது உயிரி ஆற்றல் செயல்முறைகள் (BECCS) மூலம் $CO_2$ ஐ நேரடியாகப் பிடிக்க முடியும். இந்த முறைகள் வளிமண்டலத்திலிருந்து $CO_2$ ஐ அகற்றி, அகற்ற கடினமாக இருக்கும் உமிழ்வுகளை சமநிலைப்படுத்த உதவுகின்றன. மேலும், நேரடி காற்று பிடிப்பு (DACCS) உடன் இணைந்து கார்பன் பிரித்தெடுத்தல் (DACCS) இன் ஒருங்கிணைந்த அணுகுமுறை எதிர்மறை உமிழ்வுகளை உருவாக்கும் திறனுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இது கார்பன் டை ஆக்சைடு அகற்றலுக்கான வலுவான, நீடித்த அணுகுமுறையைக் குறிக்கிறது.

## $CO_2$ போக்குவரத்து மற்றும் சேமிப்பிற்கான தீர்வுகள்




கார்பன் பிடிப்பு, பயன்பாடு மற்றும் சேமிப்பு (CCUS) தொடர்பான விரிவான அணுகுமுறையுடன், திரவமாக்கல் மற்றும் உலர்த்துதல் உள்ளிட்ட அமைப்பு வடிவமைப்பு அம்சங்களிலும் கவனம் செலுத்த. கைப்பற்றப்பட்ட $CO_2$ ஐ திறம்பட கையாளுதல் மற்றும் சேமிப்பதற்கு இந்த செயல்முறைகள் மிக முக்கியமானவை. திரவமாக்கல் $CO_2$ ஐ மிகவும் எளிதாக கொண்டு செல்லவும், மிகவும் சிறிய வடிவத்தில் சேமிக்கவும் அனுமதிக்கிறது, அதே நேரத்தில் $CO_2$ ஐ உலர்த்துவது $CO_2$ ஈரப்பதம் இல்லாமல் இருப்பதை உறுதி செய்கிறது, இது $CO_2$சேமிப்பு மற்றும் $CO_2$ போக்குவரத்து அமைப்புகளில் அரிப்பு மற்றும் பிற சிக்கல்களை ஏற்படுத்தும்.

– தொடரும்

# பண்பாட்டில் சிகரத்தார்

பணிக்காக வெளியூரில் இருந்திடுவார் நகரத்தார்
பண்பாட்டைக் காப்பதிலே சிறந்தவராம் சிகரத்தார்

சொந்த மண்ணே எந்நாளும் பெருமை
விழாக்களில் இணைந்திடுவார் என்றென்றும் உண்மை

பழனிக்குப் பாதயாத்திரைச் சென்றிடலே கடமை
விரதத்தை மேற்கொண்டுக் காத்திடுவார் உரிமை


பல்வேறு திசைகளிலே துவங்கிடுமே பயணம்
தைப்பூசம் காண்பதே இன்பத்தை நல்கும்

திட்டங்கள் இட்டே கடந்திடுவார் திசைகள்
முடியாத உறவுகளுக்கும் கொடுத்திடுவார் கரங்கள்

வழியெங்கும் உணவுகளின் விநியோகம் நடக்கும்
அன்னதானத்தில் சிறந்தவர்கள் நாமென்பதும் விளங்கும்

ஆண்டுகள் தோறும் நிகழ்ந்திடும் நிகழ்வு
நடந்திடும் சிறுப் பிள்ளைகளும் அழகு

ஐயாக்கள் அளித்திட்ட அற்புதப் பழக்கம்
முருகனைத் தரிசித்தால் மறைந்திடுமே கலக்கம்.



கவிச்சுடர்
தஞ்சை.பழ.வள்ளியப்பன்
மதுரை



# ஜாதகத்தில் 5 ஆம் இடம்.

## பூர்வபுண்ணியமும்.. வாழ்க்கை நலனும்...

–ஜோதிடர் எல்லி
9894176494



இந்த பிரபஞ்சத்தில் மானுட பிறப்பு மிக உயர்வாக கருதப்படுகிறது. அரிது அரிது மானிடராதல் அரிது என்கிறார்  ஔவை பிராட்டியார்.

மனிதர்களை காட்டிலும் தேவர்கள் உயர்ந்தவர்களாக உள்ள படினும், மனிதர்களும் தேவர்கள் எனும் நிலையை எய்தலாம் என்பதை "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் " என்னும் குறளில் வள்ளுவ பெருந்தகை குறிப்பிடுகிறார்.



ஆகவே மானுட தோற்றம் உயர்நிலை பிறப்பு தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். பிறப்பதும் இறப்பதும் மீண்டும், மீண்டும் தொடர்வதே மறுஜென்மம் எனப்படுகிறது. விட்ட குறை தொட்ட குறையாக கர்மா இங்கு நீள்கிறது எனலாம்.

இந்த பிறவி சுழற்சியில் ஜாதகரின் கர்ம பலன்கள் வேலை செய்கிறது என்பதை ஜோதிட சாஸ்திரம் உரைக்கிறது. ஜாதகத்தில் 1,5,9 எனப்படும் இந்த திரிகோண பாவகங்கள் பிறவி பலனை உணர்த்தும் இடங்கள் ஆகும்.






1– ம் வீடு லக்ன பாவகம் பிறப்பு ஜாதகர் குணம் வடிவம்

5– ம்வீடு புத்தி பூர்வ புண்ணிய ஸ்தானம் முற்பிறவி தொடர்பு

9–தந்தையார் மற்றும் ஜாதகர் வாழ்வில் பெறும் புகழ், கௌரவம், உயர்கல்வி யோகம், தர்மம் , பாக்கியம்

இந்த மூன்றிற்கும் ஒன்றுக்கொன்று தொடர்பு உண்டு.

பிறப்பு
முற்பிறப்பு
அனுபவிக்கும் பாக்கியம்



இதில் 5ம் வீடு முழுமையாக ஜாதகரின் ஜென்மார்த்த தொடர்பினை எடுத்தியம்பும். இதனையே இந்த கட்டுரையில் விரிவாக பார்க்க போகிறோம்.

5ம் பாவகம் எவற்றை வெளிப்படுத்தும்? எதனை உணர்த்துகிறது? என்பதை முதலில் பார்க்கலாம்.



சென்ற பிறவியில் நாம் செய்த பாவ புண்ணியத்தையும், நம்முடைய தேடல், அடங்காத ஆசைகள், புத்தி கூர்மை இவற்றை இந்த பாவகம் பொதுவாக வெளிப்படுத்துகிறது. எனவேதான் இதனை புத்தி, பூர்வ புண்ணிய,புத்திர ஸ்தானம் என்று பொதுவாக குறிப்பிடுகிறோம்.

முற்பிறவியில் நாம் யார் என்பதையும் இந்த பாவகம் உணர்த்தும். மேலும் ஒருவரின் உள்ளுணர்வு, நுண்ணறிவு, ஆழ்மனம், திடீர் அதிர்ஷ்டம், பல பிறவிகளில் தேடி கற்ற அறிவு, கலை ஆத்மார்த்தமான காதல் இவற்றையும் இந்த 5 ம் இடம் உணர்த்துகிறது.



ஒரு துறையில் நுழைந்த குறுகிய நாட்களிலேயே அதில் உச்சம் பெறும் யோகத்தையும் இந்த பாவகம் வெளிப்படுத்தும். எதிர்பாராத திடீர் விபத்தில் இருந்தில் ஜாதகர் அதிர்ஷ்டவசமாக தப்பிக்க இந்த 5ம் இடம் உதவுகிறது.

5ம் இடம் உடலில் மேல் வயிற்றை குறிப்பிடும் பாவகம் ஆகும். இதனால் இதில் பாவர் அமரும் போது வயிறு சார்ந்த பிரச்சனைகள் உண்டாகும். அந்தந்த கிரகங்கள் காரகத்துவம் சார்ந்து உபாதை ஏற்படும். 5 ல் நிற்கும் கிரகத்தை கொண்டே ஜாதகரின் குலதெய்வத்தை அறிய இயலும் என்பதில் இருந்தே இந்த வீட்டில் சிறப்பை நீங்கள் உணரலாம்.



அடுத்து முக்கியமான புத்திர பாக்கியத்தினை இந்த 5ம் இடம் தான் பறைசாற்றும். 5ம் அதிபதி உச்சம் பெறுவதும், 5ல் உச்ச கிரகங்கள் நிற்பதும், 5க்குடையவர் பாக்கிய ஸ்தானமான 9ல் நிற்பதும் மிக சிறந்த யோகமாகும். 5ம் இடத்தை இயற்கை சுபரான குரு பகவான் பார்வை செய்வதும்,5ம் அதிபதியை குரு பகவான் பார்ப்பதும் மிக சிறந்த நிலை ஆகும். இந்த யோக அமைப்பு சிறப்பான புத்திர பாக்கியத்தை யும் ஜாதகருக்கு அளிக்கும்.



ஜாதகத்தில் 5ம் அதிபதி 6,8,12ம் போன்ற மறைவு ஸ்தானங்களில் நிற்பதும் அந்த அதிபதிகளுடன் சேர்க்கை பெறுவதும் நல்லதல்ல. 5ம் அதிபதி இயற்கை பாவ கிரகங்களான ராகு, கேது, செவ்வாய், சனி, போன்ற கிரகங்கள் உடன் இணைந்து இருப்பதும் சிறப்பல்ல.

5ம் அதிபதி சூரிய பகவானுடன் இணைந்து அஸ்தமனம் ஆவதும் ஜாதகருக்கு பாதிப்பினை அளித்து விடுகிறது.

5ல் வக்கிர கிரகங்கள் இருப்பதும் 5ம் அதிபதி வக்கிரம் பெறுவதும் அந்த பாவகத்தின் பலனை பெறுவதில் கால தாமதம் ஆகிறது. இந்த நிலையில் சுபர் பார்வை செய்வது நல்லது.

5ல் பாதகாதிபதி நிற்பதும் இந்த புத்தி பூர்வ புண்ணிய ஸ்தானம் பாதிப்பு அடைகிறது. நீச கிரகங்கள் 5ல் அமர்வதும் அந்த இடத்தை பாதிப்படைய செய்யும்.



**5ல் சூரியன்** மேஷ லக்னத்திற்கு இந்த 5ம் இடத்தில் சூரியன் ஆட்சி பெறுகிறார். தனுசு லக்னத்திற்கு 5ல் உச்சம் பெறுகிறார். இந்த இரு லக்னங்களுக்கம் சூரிய பகவான் லக்ன சுபர் ஆவார். இது நன்மையை அளிக்கும், இவர்களுக்கு பெரும்பாலும் ஏக புத்திரன் (ஒரே ஆண் குழந்தை மட்டும்) உண்டு எனலாம்.



இங்கு சூரியன் லக்ன சுபர் ஆயினும் நெருப்பு கிரகம் என்பதால் அது சார்ந்த பிரச்சினைகளும் வந்து போகும்.புத்திரம் வகையில் சில இடர்களும் வந்து போகும்.

இதர லக்னகாரர்களுக்கு இந்த அமைப்பு நல்லதல்ல! அதிலும் சூரியனை பாதகாதிபதி யாக கொண்ட துலாத்திற்கு சிறப்பு அல்லவே. இங்கு 5ம் அதிபதி வலு ஓரளவுக்கு பாதிப்பினை குறைக்கும்.


**5ல் குரு** குரு பகவான் இயற்கை சுபர் எனினும் அவர் புத்திர காரகன் என்பதால் இங்கு அமர்வது காரக தோஷம் உண்டாகிறது. எனினும் இரண்டாம் குழந்தை க்கு இந்த தோஷம் கிடையாது என்று சாஸ்திரம் கூறுகிறது. குரு ஆண் குழந்தை க்கு காரகன் இதனால் முதல் பெண் குழந்தை க்கு தோஷம் இல்லை.

இயற்கை சுபரான குரு 5ல் அமர்வது உயர்ந்த எண்ணம், சுய கௌரவம், உயர்ந்த உள்ளம் இவற்றை பொதுவாக ஜாதகருக்கு அளிப்பார்.

**5ல் சுக்கிரன்** சுக்கிரன் பாதகாதிபதியாகவோ, நீச நிலையிலோ இல்லாமல் 5ல் அமர்வது பாதிப்பு இல்லை. ஆட்சி பெறுவது நலம். புதன் சுக்கிரன் இணைவு கலை ஈடுபாடு ஜாதகருக்கு உண்டு.

5ல் சந்திரன். இங்கு ஆட்சி பெறுவதும் சிறப்பு அட்டமாதிபதியாகவோ, லக்ன அசுபராக அமையும் போது பாதிப்பினை ஏற்படுத்தும்.

**5ல் புதன்.** புதன் பல்துறை விசயங்கள் பற்றிய அறிவு மற்றும் தகவல் தொழில்நுட்ப கிரகம் எனலாம். இது அலி கிரகம் ஆகும் பெண் வீடு மற்றும் பெண் கிரகமான சுக்கிரன் உடன் சேர்க்கை பெறும் போது பெண் மகவு அளிக்கும். ஜாதகருக்கு தெளிந்த அறிவு உண்டாகும்.



**5ல் நிழல் கிரகங்கள்.** 5ல் ராகு அல்லது கேது அமைந்தாலும் அந்த இடத்தினை குரு பகவான் பார்வை செய்வது நல்லது. 5ம் பாவகம் ராகு அல்லது கேது விற்கு நட்பு வீடாக இருந்தால் பெரிதாக பாதிப்பு இல்லை.



இவ்வாறு இல்லாத நிலையில் அந்த கிரகங்களின் தாக்கம் ஜாதகருக்கு உண்டு. இவற்றினை பற்றி முழுமையாக அறிய தனி பதிவில் பார்ப்போம்.

இரண்டிற்கும் மேற்பட்ட கிரகங்கள் 5ல் அமரும் போது அதில் குரு பகவானும் இடம் பெறுவது அந்த பாவகம் தோஷ நிவர்த்தி ஆகி பலம் பெறும். நான்கைந்து கிரகங்கள் 5ம் இடத்தில் அமர்வது நல்ல யோகம் ஆகும்.

சனி+செவ்வாய், ராகு+செவ்வாய் போன்ற பாவ கிரகங்கள் சேர்க்கை 5ல் இருப்பது நல்லதல்ல.


"5 க்குடையவர் எங்கு நிற்பினும் மிஞ்சும் பலனை செய்வார்"என்பது ஜோதிட விதி அதாவது அதீதமான யோகத்தை செய்வார் என்பது பொருள். எனவே 5ம் இடத்து அதிபதி தசா நல்ல சுபபலன்களை கொடுக்கும்.



5ல் பாவ கிரகங்கள் இருப்பினும் அதன் தசா வராதவரை பெரிதாக பயப்பட தேவையில்லை. 5ல் கிரகங்கள் இன்றி குரு பகவான் அந்த இடத்தை பார்ப்பதும் சிறப்பு தான்.


இதுவரையிலும் ஜாதகத்தில் முற்பிறப்பு கர்மவினையின் திறவுகோலான லக்னத்திற்கு 5ம் இடத்தை பற்றிய அரிய தகவல்களை அறிந்து கொண்டோம்.

மீண்டும் மற்றொரு தலைப்பில் சந்திக்கலாம்.

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர். ஜோதிடம், தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர் தொடர்புக்கு : 9894176494





நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON Google Play




# வாழ்த்தி மகிழ்வோம்...

**அன்பார்ந்த வாசகர்களே..**

நமது மின்னிதழில் வாழ்த்தி மகிழ்வோம் பகுதியில் வாசகர்கள் இனி தங்கள் குடும்ப உறுப்பினர்கள் திருமணம், பிறந்த நாள், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் இன்னும் பல இனிமையான தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் வாசகர்களோடு பகிர்ந்து மகிழலாம்.

**அட்டைப்படம் மற்றும் இதழில் ஒரு பக்க செய்திக்கான கட்டணம் : ரூபாய் 3000 மட்டும்**

**இதழில் ஒரு பக்கச்செய்தி : ரூபாய் 500 மட்டும்**

இனிய தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் குடும்பங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

தங்களது இல்ல நிகழ்வுகளை வெளியிட
இதழின் மின்னஞ்சல் முகவரி
naamnagarathar@outlook.com
அல்லது
96590 32994 என்ற
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# நாம் நகரத்தார்

**சமூக இணையதள மின்னிதழ்**

**நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல் மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின் பெட்டகமாக ஓர் மின்னிதழ்.**

**மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும் உங்கள் கைபேசி வாயிலாக...**

**நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள் மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,**

# 97917 76534

**www.naamnagarathar.com**